‘சாக்ரெட்டிஸ்’ என்னுங் கிரேக்க தத்துவ நிபுணருக்கு நஞ்சு ஊட்டப்படுதல்.

ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்

திங்கள்தோறும் வெளிவருவது.

சிலம்பு ௯	மெய்கண்டான் யாண்டு-௭௱௮ புரட்டாசித் திங்கள் 1931௵ செப்டம்பர்௴—அக்டோபர்௴	பரல் ௯

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
 மயானத்தான் வார்சடையா னென்னி னல்லான்
ஒப்புடைய னல்லன் ஒருவ னல்லன்
 ஓரூர னல்லன் ஓருவம னில்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
 அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
 இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே.

(பதவுரை)

மைப்படிந்த கண்ணாளும் தானும்=மை தீட்டப்பெற்ற கண்களை யுடைய உமையாளும் சிவபெருமானும் (பிரியாது சேர்ந்திருக்கிற உமாமகேசுரனை —மாதிருக்கும் பாதியனை)

கச்சி மயானத்தான்=திருக்கச்சி மயானத்திலே யிருக்கிறவன்

வார் சடையான்=நீண்ட சடையை உடையவன்

என்னினல்லால்=என்று நாம் அவனுடைய பொது இயலை(தடத்த இல்க்கணத்தை)ச் சொல்லக்கூடுமே அல்லாமல்

ஒப்புடையனல்லன்=அவனுடைய உண்மை இயலை (சொரூப இலக்கணத்தை)ப் பற்றி எந்தப் பொருளோடாவது உவமித்துக் கூறப்

படாதவன்; அஃதாவது, எந்தப் பொருளாவது அவனுக்கு ஒப்பு என்று சொல்லக் கூடாதவன்;

ஒருவனல்லன்=ஏகன் என்றாவது, அநேகன் என்றாவது கூறக் கூடாதவன்;

ஓரூரனல்லன்=யாதாம் ஓர் ஊரில் இருப்பவன் என்று கூறக் கூடாதவன்;

ஒருவமனில்லி=எந்தப் பொருளோடாவது பயனிலாவது மெய்யிலாவது உருவிலாவது உவமித்துக் கூறக் கூடாதவன்;

அப்படியும்=அவனுக்கு அந்த உருவமும்

அந்நிறமும்=அந்த நிறமும்

அவ்வண்ணமும்=அந்தப் பண்பும்

அவனருளே கண்ணாகக் காணினல்லால்=அவனுடைய திருவருளைத் துணையாகக் கொண்டு உணரவேண்டுமே அல்லாமல்

இப்படியன்=இந்த உருவத்தன்

இந்நிறத்தன்=இந்த நிறத்தன்

இவ்வண்ணத்தன்=இந்தப் பண்புடையவனென்றும்

இவன் இறைவன் என்று எழுதி=இவன்தான் இறைவன் என்று விரலாற் சுட்டியும், துணியில் எழுதியும்

காட்டொணாதே=காட்ட முடியாதவன்.

ஏ=அசை நிலை.

(விளக்க உரை)

மைப்படிந்த கண்ணாளுந் தானும் கச்சி மயானத்தான் வார்சடையான் என்னின் அல்லால் என்பது இறைவனுடைய பொதுவியலை (தடத்த இலக்கணத்தை)க் குறிக்கின்றது.

"ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற் காயிரம்
திருநாமம் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ"

என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறியிருத்தல் காண்க. பின் மூன்று அடிகளிலும் இறைவனுடைய உண்மையியல் (சொரூப இலக்கணம்) கூறப்படுகின்றது.

ஒப்புடையனல்லன்=அவனுக்கு ஒப்பான ஒரு பொருள் இல்லை என்பது பொருள்.

ஒருவமனில்லி—அவனோடு மெய் பயன் உருவுகளில் எதிலாவது உவமித்துக் கூறக் கூடாதவன் என்பது பொருள்.

அப்படியும், அந்நிறமும், அவ்வண்ணமும் என மூன்று வகையாக அடிகள் சொன்னது முறையே இறைவனுடைய உண்மை அறிவு இன்ப (சச்சிதாநந்த)த் தன்மையை. "பூவண்ணம் பூவின் மணம் போல மெய்ப்போத வின்பமா வண்ணம் மெய் கொண்டவன்" என்று திருவிளையாடற் புராணத்திற் கூறியிருத்தல் காண்க.

அவனருளே கண்ணாகக் காணுதலாவது, ஓருயிர் தத்துவக் கருவிகளைக் கடந்து நின்று அவனுடைய அருளோ டொன்றுபட்டு வேறற நின்று தன்னிலே (உயிரிலே) அவனை விளங்க உணர்தலாகும். அவ்வாறு ஓருயிர் இறைவனைத் தன்னறிவிலே விளங்க உணர்தல் அவன் கதிரோனைக் காந்த விளக்கு முதலிய விளக்குகளின் ஒளி கொண்டு பார்க்க முடியாது தனது கண்ணொளி கதிரோனொளி யோ டொன்றுபட்டு நின்று பார்த்தல் போல்வது.

3-வது அடியில் அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும் என்று சொன்னதற்கு ஏற்ப, அடிகள் 4-வது அடியில் இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் என்று கூறினார்.

இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே என்றதனாலே விரலாற் சுட்டியும் கையால் எழுதியும் ஊனக் கண்ணாற் சுட்டி அறியப் படுகிறவனல்லன் என்பதும் அகக்கண்ணாகிய மெய்யறிவுக் கண்ணால் (ஞானக் கண்ணால்) உணரப்படுகிறவன் என்பதும் கூறப்பட்டன. "முகத்திற் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள், அகத்துக் கண்கொண்டு பார்ப்பதே யானந்தம்" என்று திருமூலர் திருமந்திரத்திற் (2944) கூறியதும் இக்கருத்தையே.

இறைவன் உயிர்களின் பொருட்டு ஐந்தொழில் செய்யும் பொது இயல் நிலையில் அவனை இன்ன உருவன் என்றும், இன்ன ஊர்தி யிருப்பவன் என்றும், இன்ன பெயருடையவன் என்றும் மக்களாகிய நாம் நமது கருவி அறிவு கொண்டு கூறலாமே அல்லாமல் அவன் தனியே நிற்கும் உண்மை இயல் நிலையை அறிந்து கூறுதல் முடியாதென்றும், ஓருயிர் தனது கருவி அறிவு கடந்து நின்று இறைவனது அருளோடொன்றுபட்டு வேறற நிற்கும் நிலையில் மட்டும் தன்னறிவில் அவன் விளங்கக் கண்டு உணரலாமென்றும் இந்தத் தேவாரப்பா கூறுகின்றது.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

பண்டைத் தமிழ்ச் சொற்கள்

[மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள்]

அண்ணல்—அண்டன் (௧௬)

1. பண்டைத் தமிழ் மக்கள் அண்ணல் என்ற சொல்லையும் அண்டன் என்ற சொல்லையும் தாங்கள் வணங்கும் கடவுளினது பெயர்களாக வழங்கி வந்தார்கள். இரண்டு சொற்களும் அண் என்ற ஒரு வேர்ச்சொல்லிலிருந்து வந்தமையால், அவைகள் ஒரு கட்டுரையில் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப் பட்டன. அவர்கள் அச்சொற்களைக் கடவுளுக்கு வழங்கி வந்ததற்கு அவர்கள் கொண்டிருந்த கருத்துக்களை இக்கட்டுரையில் இயன்றவாறு கருதுவாம்.

2. அண்ணல் என்ற சொல்லானது 'அண்' என்ற பகுதியும் (அடிச்சொல்) 'அல்' என்ற தொழிற்பெயர் விகுதியும் சேர்ந்தும், அவ்வாறு சேரும்பொழுது அண் என்பதிலுள்ள ணகரவொற்று இரட்டித்தும் ஆகியது. அண் என்ற அடிச்சொல் சேர் என்று பொருள்படும். சேர், சார், பற்று, கிட்டு, கூடு, அடை என்பன ஒருபொருட் சொற்கள். அண்ணல் என்பது சேர்தல் என்று பொருள்படும். அது தொழிலாகு பெயராய்ச் சேர்தலை உடையவனை, அதாவது, சேர்ந்திருப்பவனைக் குறிக்கின்றது. அவ்வாறு 'அண்' என்ற பகுதியடியாக ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற பொருளில் 'அண்ணன்' என்ற சொல்லும் தலைவன் மனைவி என்ற பொருளில் 'அண்ணி' என்ற சொல்லும், சமீபம் என்ற பொருளில் 'அண்மை' என்ற சொல்லும், சேர்ந்திருத்தல் என்ற பொருளில் அண்ணித்தல் அண்ணுதல் என்ற சொற்களும் வழங்கப்படுதல் காண்க. 'அண்ணல்' என்பதனுடன் ஆர் விகுதி சேர்த்து அண்ணலார் என்று கூறுதலுமுண்டு. சேர்ந்திருக்கிற நாக்கு என்ற பொருளில் அண்ணு, அண்ணுக்கு என்ற சொற்களும் வழங்கப்படுகின்றன. ஒரு பொருளுடன் மற்றொரு பொரு

ளைச் சேர்க்கிறதற்காக அறையப்படும் ஆணியும் அண் என்ற பகுதி அடியாய்ப் பிறந்த சொல்லாகும்.

3. 'அண்டன்' என்ற சொல்லும் அண் என்ற பகுதி அடியாய்ப் பிறந்த சொல்லாகும். அண் என்ற பகுதியின் ஈற்றிலுள்ள ணகரவொற்று டகர உகர உயிர்மெய் யெழுத்தை அவாவி அதனைச் சேர்ந்து 'அண்டு' என்றாகியது. அண் என்ற சொல்லும் அண்டு என்ற சொல்லும் ஒரே பொருளில் வருகின்றன. ஒருவன் பிறனொருவனை அண்ணினான் என்றாலும் அண்டினான் என்றாலும் பொருளொன்றே. வேணும், அல்லது வேண்டும் என்றும் வேணவா அல்லது வேண்டவா என்றும் வினைச் சொற்களில் டகர உகர உயிர்மெய் சேர்த்தும் சேர்க்காமலும் நாம் ஒரு பொருளில் வழங்குகின்றோம். பெண்ணைக் குறிக்க பெண் என்றாவது பெண்டு என்றாவது நாம் சொல்லுகின்றோம். மேகத்தைக் குறிக்க விண் என்றாவது அல்லது விண்டு என்றாவது நாம் சொல்லலாம். 'அண்டு' என்ற பகுதியுடன் உயர்திணை ஆண்பால் ஒருமை விகுதி அன் சேர்ந்து 'அண்டன்' என்றாகியது. அண்டன் என்ற சொல்லுக்கும் சேர்ந்திருக்கிறவன் என்பதே பொருள். அண்டை என்ற சொல் அருகிடம் என்ற பொருளில் வழங்கப்படுகின்றது. அண்டம் என்ற சொல்லும் அண்டு என்ற பகுதியடியாய்ப் பிறந்த சொல்லாகும். அண்டப்பட்டது அதாவது அடை காக்கப்பட்டது என்ற பொருளில் அண்டம் என்பது கோழி முதலிய பறவைகளின் முட்டைக்குப் பெயராய் வழங்கப்பட்டு வந்தது. துண்டிக்கப் பட்டது 'துண்டம்' என வந்ததுபோல, அண்டப்பட்டது அண்டம் என வந்தது. நாம் வாழும் பூமி முட்டைவடிவினதா யிருத்தல் பற்றி முதலில் முட்டையைக் குறித்த சொல் பின் பூமியையுங் குறிக்க வழங்கப்பட்டு வந்தது. இதனால், தமிழ் முன்னோர்கள் நீண்ட காலத்துக்கு முன்னே பூமி வட்ட வடிவினதா யிருத்தலை அறிந்திருந்தார்கள் என்பதை நாம் அறிகிறோம். பூமியைக் குறிக்கிற மண்டலம் (மண் + தலம்) என்ற பெயர்ச்சொல் வட்டம் என்ற பொருளிலும் அதன் அடியாய்ப் பிறந்த மண்டலித்தல் என்ற வினைச்சொல் வளைந்திருத்தல் என்ற பொருளி

லும் பண்டைத்தமிழ் நூல்களில் வழங்கி வந்திருத்தலும் பூமி வட்டவடிவினது என்று அவர்கள் அறிந்திருந்ததை நமக்கு அறிவிக்கிறது. அண் அண்டு அண்டை என்ற சொற்கள் தெளிவாகத் தமிழ்மொழிச் சொற்கள் என்று நமக்கு விளங்குகிறபடியால் அண்டு என்ற பகுதியின் அடியாகப் பிறந்த அண்டம் என்ற சொல்லும் தமிழ்மொழிச் சொல் என்பது தெளிவு. அண்டம் (अंड) என்ற சொல் வடமொழியில் முட்டை என்ற பொருளில் வழங்கப்படுதல் உண்மையே. ஆனால் அந்தச் சொல் தமிழ் மொழியிலிருந்து வடமொழியில் வந்து வழங்கப்படும் பல சொற்களில் ஒன்று. அவ்வாறே கடவுளைக் குறிக்கிற அண்ட: (अंडः) என்கிற வடமொழிச் சொல்லும் தமிழ் மொழியிலிருந்து வடமொழிக்கு வந்த சொல்லாகும்.

4. அண்ணல் என்ற சொல்லும் அண்டன் என்ற சொல்லும் சேர்ந்திருக்கிறவன் என்று பொருள்படும் என்பது மேலே விளக்கப்பட்டது. அவ்வாறு சேர்ந்திருக்கிறவன் கடவுள் என்று பண்டைத்தமிழ் மக்கள் அறிந்திருந்தார்கள் என்ற உண்மையை அவர்கள் பின்பற்றிவந்த சைவசமயங் கூறுகிற நூல்களில் நாம் காண்கின்றோம். சேர்ந்திருக்கிறவன் என்பது யாரை அல்லது எதனை என்னுங் கருத்தை அவாவி நிற்கும். கடவுள் உயிர் உலகம் (பதி, பசு, பாசம்) என்ற முப்பொருள்களில் சேர்ந்திருக்கிறவன் கடவுள் என்றால் எஞ்சி நிற்கும் பொருள்கள் உயிரும் உலகமும் ஆதலின் உயிரையும் உலகையும் சேர்ந்திருக்கிறவன் என்பது கருத்தாகும். முன் இயவுள் என்ற பண்டைத் தமிழ்ச் சொல் (2) விளக்கக் கட்டுரையிற் கூறப்பட்டபடி, கடவுள் உயிரையும் உலகையும் இயக்குதற்காக அவைகளோடு சேர்ந்திருக்கின்றான். அவன் அவைகளை இயக்கினாலன்றி அவைகள் தாமாக இயங்கா. அவைகள் கடவுள் வயப்பட்டவை; கடவுளோ தன்வயப்பட்டவன்; அதனால் அவன் முதன்மை (தலைமை)ப் பண்பு உடையவனாகின்றான். "ஆதிபகவன் முதற்றே யுலகு" என்றார் தெய்வப் புலமைத் திருவள்ளுவரும். ஆதலின் அண்ணல் என்ற சொல் தலைவன் அல்லது முதல்வன் என்ற பொருளில் வழங்கப்பட்டு வருகின்றது.

அது தலைமை என்ற பொருளிலும் வழங்கப்படுதலுண்டு. அண்டன் என்ற சொல்லும் தலைவன் அல்லது முதல்வன் என்ற பொருளில் வழங்கப்பட்டு வருகின்றது.

5. கடவுள் உயிரைச் சேர்ந்திருந்தும் உயிர் மலத்தினால் அநாதியாகப் பிணிக்கப்பட்டிருத்தலினாலே அறியாமையையும் அதனாலே துன்பத்தையும் உடையதாகின்றது. அம் மல நீக்கத்துக்காகவே கடவுள் உயிருக்கு உடல், உட்கருவி, உலகம் நுகர் பொருள்களை (தனு கரண புவன போகங்களை)க் கொடுத்து அதனை உலகில் வாழும்படிச் செய்து மலத்தை நீக்கி இன்பம் தருகின்றான் என்று சைவ சமய நூல்கள் கூறுகின்றன. உயிரானது தத்துவக் கருவிகளை ஒன்றொன்றாய் நீக்கி மலம் நீக்கப் பெற்ற பொழுது தனது அறிவிலே கடவுள் விளங்கக் கண்டு அவனோடு ஒன்றுபட்டு இன்பம் அடையப் பெறுகின்றது. இக்கருத்து

கண்டவை யன்றன் றெனவிட்டுக் கண்டசத்தாய்
அண்டனை யான்மாவி லாய்ந்துணரப் பண்டணைந்த
ஊனத்தைத் தான்விடுமா றுத்தமனி னெண்கருட
சானத்திற் றீர்விடம்போற் றான்

என்ற சிவஞானபோதம் 9-வது சூத்திர வெண்பாவிற் கூறப்பட்டிருத்தல் காண்க. இவ்வெண்பாவில் கடவுளுக்கு அண்டன் என்ற சொல் வழங்கப்பட்டிருத்தல் நோக்கத்தக்கது. உயிரை இன்பம் அடையச்செய்யவே கடவுள் அதனைச் சேர்ந்திருக்கிறான். திருச்சிற்றம்பலக் கோவையார் ௱௬-வது பாட்டில் "மத்தகஞ்சேர் தனிநோக்கினன் வாக்கிறந்தூ றமுதே—யொத்தகஞ் சேர்ந்தென்னை யுய்ய நின்றோன்" என்றும், திருஞானசம்பந்த சுவாமிகள் பாடிய திருவல்லம் தேவாரம் ரு-வது பாட்டில் "சார்ந்தவர்க் கின்பந் தழைக்கும் வண்ணம்—நேர்ந்தவன்" என்றும், திருவருட் பயன் 8-வது அதிகாரம் ௩-வது பாட்டில் "இன்பதனை யெய்துவார்க் கீயும்" என்றும் கூறியிருத்தல் காண்க. "திரு புத்தூரனைச்சிந்தை செய்யசெய்யக்—கருப்புச் சாற்றிலு மண்ணிக்குங் காண்மினே" என்ற திருநாவுக்கரசு சுவாமிகள் திருவரிசிற்கரைப்புத்தூர்த் தேவாரம் 5-வது

பாட்டில் அண்ணிக்கும் என்ற சொல் தித்திக்கும் என்ற பொருளில் வழங்கப்பட் டிருக்கின்றது.

6. இனி, அண்ணல், அண்டன் என்ற இரண்டு சொற்களும் கடவுளைக் குறிக்கத் தமிழ் நூல்களில் பல இடங்களில் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சிலவற்றை இங்கே குறிப்பிடுவாம்.

1. அத்தனைமையாளுடைய அண்ணலிடமென்பர்.

   திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பழுவூர்த் தேவாரம் க-வது பாட்டு.

2. தொண்டருக்கெளியாய் திருவாலவாய்—அண்டனே,

   திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாலவாய்த் தேவாரம் எ-வது பாட்டு.

3. அண்ணலார் போகின்றார் வந்து காணீரழகியரே யாமாத்தூ ரையனாரே.

   திருநாவுக்கரசு சுவாமிகள் திரு ஆமாத்தூர்த் திருத்தாண்டகம் க-வது பாட்டு.

4. அண்டரே யமரரேறே திருவையா றமர்ந்ததேனே.

   திருநாவுக்கரசு சுவாமிகள் திரு ஐயாறு தேவாரம் சு-வது பாட்டு.

5. அண்ணலே யெனை யஞ்சலென்றருளா யாரெனக்குற வமரர்களேறே.

   சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாவடுதுறைப் பதிகம் 2-வது பாட்டு.

6. அண்டா வாலங்காடா வுன்னடியார்க் கடியே னுவேனே.

   சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாலங்காடு தேவாரம் எ-வது பாட்டு.

7. அண்ணலாண்டு தன்னடியாற் கூட்டிய வதிசயங் கண்டாமே.

   திருவாசகம்—ஞானகுரு தரிசனம் ரு-வது பாட்டு.

9. அண்டனடஞ் செய்யு மாலயந் தானே.

திருமந்திரம் அதிசயப் பத்து கூ-வது பாட்டு.

8. அண்ண லிருப்பிட மாரு மறிகிலர்
அண்ண லிருப்பிட மாய்ந்து கொள்வார்களுக்கு
அண்ண லழிவின்றி யுள்ளே யமர்ந்திடும்
அண்ணலைக் காணி லவனிவ னாமே.

திருமந்திரம் அற்புதக் கூத்து கஉ-வது பாட்டு.

10. அண்ணலே யெனை ஆண்டு கொண்டருளிய வமுதே
பெரிய புராணம் திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம் ௩கூஅ-வது பாட்டு.

7. அடிகள் அந்தணன் என்ற சொற்கள் முதலாவது கடவுளைக் குறிக்க வழங்கப்பட்டுப் பின் கடவுளினது அருள் பெற்ற பெரியாரைக் குறிக்க வழங்கப்பட்டு வந்தன போல அண்ணல் என்ற சொல்லும் கடவுளுக்கு முதலாவது வழங்கப் பட்டு, பின் மக்களை ஆளும் அரசனுக்கும், மக்களில் கடவுளினது அருள்பெற்று விளங்கும் பெருமையிற் சிறந்தோனுக்கும், பொதுவாகத் தலைவனுக்கும் தமிழ் நூல்களில் வழங்கப்பட்டு வந்துள்ளது. அண்டன் என்ற சொல் கடவுளுக்கு வழங்கப் பட்டு வந்தபின் பொதுவாகத் தலைவன் என்னும் பொருளில் வழங்கப்பட்டு வந்தது. அண்டர் என்ற சொல் தேவர்கள் என்ற பொருளிலும் வழங்கப்பட்டு வருகிறது. தலைவன் என் னும் பொருளில் கோன் என்ற சொல்லைத் தங்கள் பெயருக்குச் சேர்த்துக் கூறுகிற இடையர் என்ற சாதியார்களைக் குறிக்க வும் 'அண்டர்' என்ற சொல் வழங்கப்படுகின்றது.

சேக்கிழார்

[திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள்]

சேக்கிழார் சுவாமிகள் சைவப் பெரியார்களின் சரித்திரங் கள் மறைவுபடாமல் உலகத்தோர் பொருட்டாகச் சேமித்து வைத்தருளிய பெருமான் ஆவர். ஏனைய புலவர் மக்களைப் போல் அல்லாது உண்மைச் சரித்திர பாகங்களையும் அவ்வக்

காலத்தில் நடந்த நடவடிக்கைகளையும்சேர்த்துத் திரட்டி இனிய நடையில் அச்சரித்திரங்களை அருளி யிருக்கின்றார். அதற்கு அநுகூலமாக அவருக்கு அவருடைய அமைச்சுத் தொழிலும் தேர்ந்த கல்வியும் திரண்ட அனுபவ ஞானமும் இருந்தன. அன்னார் சரிதத்தை அவருக்குப் பின் 200 ஆண்டுகளில் அவதரித்த உமாபதி சிவாச்சாரியர் அருளிய சேக்கிழார் புராணத்தினால் அறியலாம். மேலும் அவரியற்றிய பெரிய புராணத்தின் கண்ணேயும் பல உட்சான்றுகள் உள. சேக்கிழார் பிள்ளைத்தமிழில் அவரது பெருமையும் சமீப காலத்தில் வெளியான சேக்கிழார் சரிதம் (சுப்பிரமணிய பிள்ளை), சைவசிகாமணிகள் இருவர் (சோமசுந்தர தேசிகர்) என்ற நூல்களில் ஆராய்ச்சி உரைகளும் காணலாம்.

தொண்டை நாட்டிலே குன்றத்தூரிலே வேளாளர் மரபிலே சேக்கிழார் குடியிலே அவர் அவதரித்தனர். அருண்மொழித்தேவர் என்ற பிள்ளைத் திருநாமம் அவர்க்கு இட்டார்கள். அவரது இளவல் பாலறுவாயர் என்பார். அக்காலத்திலும் அரசர்கள், பெரியார்கள், கடவுளர்கள் ஆகிய இவர்கள் பெயர்களை மக்களுக்கு இடுவது வழக்கம். அருண்மொழி என்பது அக்காலத்துச் சோழ மன்னர்கள் தங்கள் பட்டப் பெயர்களாக வைத்துக்கொள்வது. பாலறுவாயர் என்பது திருஞானசம்பந்தப் பெருமானது திருநாமம். சேக்கிழார் குடியிலே நமது பெரியார் சிறந்து விளங்கி அக்குடிக்கே பெரும்புகழ் கொடுத்தவரானதினால் அவரைச் சிறப்பாகச் சேக்கிழார் நாயனார் என்றே உலகத்தார் வழங்கி வந்தார்கள்.

சுவாமிகள் இளவயதிலேயே கல்வியில் சிறந்து அறிவில் முதிர்ந்தவராக விளங்கி யிருந்தார். அதனைக் கண்ட அக்காலத்து மன்னர் அநபாயச் சோழர் அவரை அழைத்துத் தன் அமைச்சராக வைத்துக் கொண்டார். அவரது மேம்பாட்டைக் கண்டு வியந்து அவருக்கு உத்தம சோழப் பல்லவராயர் என்ற பட்டமும் தந்தனர். இக்காலத்து மன்னரைப் போன்றே அக்காலத்துச் சோழரும் பெருமக்களுக்குப் பட்டங்கள் வழங்குவதுண்டு என்பதைக் கல்வெட்டுகளால் அறியலாம்.

சுவாமிகள் அமைச்சுத் தொழிலில் அமர்ந்திருந்தும் சைவ சமயத்தில் ஈடுபட்டவர் ஆதலால் சோழநாட்டுத் திருநாகேசுவரரிடம் அன்பு மிகுத்திருந்த காரணத்தைக் கொண்டு தம் ஊரிலும் அவர் ஒரு நாகேசர் ஆலயத்தை எழுப்புவித்து மடவிளாகம் ஒன்று கட்டி அதற்குத் திருநாகேசுவரம் என்ற பெயரிட்டு வழங்கி வந்தனர்.

அமைச்சுத் தொழிலில் அமர்ந்திருக்கையில் ஒருநாள் அரசர் தம் நண்பர்களோடு சிற்றின்பமும் ஜைன உபதேசமும் நிறைந்துள்ள சீவக சிந்தாமணி என்ற நூலை வியந்துபாராட்டிக்கொண்டிருக்கையில் மிகவும் துயரமெய்தி அரசரை விளித்துச் சைவத்தில் பிறபலன் கிடைக்கக்கூடிய பல சரிதங்கள் இருக்க இப் பொய்ந்நூலை மகிழ்வது நன்றன்று. கரும்பிருக்க இரும்பு கடித்தலும், விளக்கிருக்க மின்மினித் தீக் காய்தலும் போலாகும் அச் செயல் என்றார். அரசன் அவ்வித சரிதங்கள் உண்டோ என, நம்பியாண்டார் நம்பிகள் அருளின திருவந்தாதியில் கண்ட சரிதங்களை எடுத்து உரைத்தார். அவைகளைக் கேட்டு மகிழ்ந்து அச்சரிதங்களை அமைத்துக் காவியமாக ஒரு நூல் இயற்றும்படி வேண்ட சுவாமிகள் தில்லையில் சென்று ஈசன் அருள் காட்ட அதனைப் பெற்று ஓர் ஆண்டளவில் திருத்தொண்டர் புராணத்தை இயற்றி அருளினார்.

புராணம் எழுதுவதை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அரசர் உடனே தில்லைக்குத் தன் பரிசனங்களுடன் சென்று சுவாமிகளிடம் புராணத்தை ஓதும்படி வேண்டினார். அப்படியே சேக்கிழாரும் ஆயிரக்கால் மண்டபத்தில் அரசர் முதலானோர் இருந்து கேட்க ஓர் ஆண்டு அளவில் தம் புராணத்தை விரித்துரைத்தனர். பின்னர், புராணத்தைச் சேக்கிழாருடன் யானையின் மீதேற்றி ஊர்வலம் செய்வித்து யாவரையும் மகிழ்வித்தனர். புராணமும் பன்னிரண்டாந் திருமுறையாகச் சேர்க்கப்பட்டது. பின்னர் அருண்மொழித்தேவர் அமைச்சுத் தொழிலைத் துறந்து சிவசிந்தனையிலேயே வீற்றிருந்து பின் சிவபதம் அடைந்தனர். அரசர் அவர் தம்பி பாலறுவாயரை அமைச்சராகக்

கொண்டு அவருக்குத் தொண்டைமான் என்ற பட்டம் அளித்து ஆண்டு வந்தனர்.

II

ஏனைய சைவப் பெரியோர்களைப் போன்றே சேக்கிழார் காலத்தைப் பற்றியும் பலவித அபிப்பிராயங்கள் புலவரிடை உண்டு. ஒருவர் இராஜேந்திரச் சோழன் (1013—1045) காலம் என்றும், ஒருவர் குலோத்துங்கன் I (1073—1118) காலம் என்றும், ஒருவர் குலோத்துங்கன் II (1123—1146) காலம் என்றும் கூறுவர். சேக்கிழாரும் தாம் எழுதிய சரித்திரங்களில் பல சரித்திரப் பகுதிகளைக் குறித்தனரே யன்றித் தம்மைப் பற்றியும் தாம் இருந்த காலத்தைப் பற்றியும் ஐயம்தீரக் குறிப்புகள் எழுதி வைக்கவில்லை. அரசர்களின் பெயர்களைக் குறிக்கும் போதும் அநபாயன் போன்ற பட்டப் பெயர்களைக் குறித்துள்ளாரே ஒழியச் சிறப்புப் பெயர்களைக் குறிக்கவில்லை. அக்காலத்தைய பிறநாட்டு அரசர்களின் பெயர்களையும் அவர் குறிக்கவில்லை. இதனாலே கால நிர்ணயத்திற்கு முட்டுப்பாடு நேர்ந்திருக்கிறது.

சேக்கிழார் அவதரித்த காலத்தில் சோழர் ஆதிக்கம் உன்னத ஸ்திதியில் இருந்தது. சைவ சமயமும் நிலைநின்று பெருகியது. 7, 8, 9 நூற்றாண்டுகளில் சமயாசாரியர்கள் நால்வரும், கண்டராதித்தர் கருவூர்த் தேவர் நம்பியாண்டார் முதலான சைவப் பெரியார்களும் தழைத்து ஓங்கிச் சைவத்தை நிலைநிறுத்தினார்கள். சோழ மன்னர்களும் அவர்களின் உபதேசங்களுக்கு ஆட்பட்டு ஆலய மெழுப்பியும் திருப்பதிகங்கள் ஓதுதற்கு ஏற்பாடுகள் செய்தும் சைவத்தைப் பெருக்கி வந்தார்கள். இதனைச் சார்ந்தாற் போல வைணவமும் மாத்வமும் இத்தென் நாட்டில் வளர ஆரம்பித்தன.

சைவ சமயாசாரியர்கள் சைவத்தை நிலை யூன்றினதற்கு முன்பு 500 ஆண்டுகளாகச் சமணமே இந்நாட்டில் பிரபலித்திருந்தது. அம்மதம் வடக்கே இருந்து வந்தது. அதனாசிரியர்கள் கலைகளில் வல்லவர்கள். தாங்கள் செல்லும் நாடுகளிலெல்லாம்

அவ்வம்மொழிகளைக் கற்று அவைகளில் தங்கள் கொள்கைகளை நிலைநிறுத்திச் சிறந்த நூல்களையும் வெளியிட்டனர். தெலுங்கு நாட்டில் 10-ம் நூற்றாண்டிற்கு முந்தி ஜைனப் புலவர்களே முற்பட்டிருந்தார்கள். இராஜேந்திரச் சோழன் (1030) அதைப் பிடித்துச் சைவத்தைக் கொண்டு சேர்த்தபோது அங்கிருந்த ஜைனர் கன்னட நாட்டிற் புகுந்தனர். கன்னட நாட்டில் அதன் பிறகு 100 ஆண்டுகள் வரை அவர்களே சிறந்து விளங்கி வந்தனர். சமணராக இருந்த ஹாய்சள அரசர்கள் வைணவத்திற்கும் சைவத்திற்கும் திரும்பவே அங்கேயும் அம் மதம் நிலைகுலைந்தது. நம் தமிழ் நாட்டிலோ அப்பராலும் சம்பந்தராலும் சமணம் சீர்குலைந்ததை அவ்வாசாரியர்கள் சரித்தில் காட்டி யிருக்கின்றோம். ஆனால் அரசியலில் சமண சம்பந்தம் குறைந்து போயும் தமிழர்களுடைய சமரச பாவனையினால் ஜைன மதம் முழுதும் குன்றாமல் புலவர் மாட்டு நிலைத்து வந்தது. ஏனெனில் 8, 9, 10 நூற்றாண்டுகளிலுங்கூட ஜைனப் பெரு நூல்களான கொங்கு வேண் மாக்கதை, சூளாமணி, நீலகேசி, யசோதர காவியம், சிந்தாமணி முதலிய காவியங்களும் அறநெறிச் சாரம் முதலான நீதி நூல்களும் இயற்றப் பெற்றன. மேலும் 10, 11, 12 நூற்றாண்டுகளில் வீரசோழியம், நேமிநாதம், வச்சணந்தி மாலை, யாப்பருங்கலக் காரிகை, திவாகரம் பிங்கலந்தை முதலான இலக்கணங்களும் அடியார்க்கு நல்லார் முதலியோர் அரிய உரைகளும் உண்டாயின. இதன் பின்னரும் நன்னூல், நம்பி அகப்பொருள், சூடாமணி நிகண்டு முதலியவை ஏற்பட்டதும் அறிவோம். ஆகவே, சமண மேம்பாடு கலைகளிடம் நீங்காது தழைத்திருந்தது நோக்கத் தக்கது. அதற்குக் காரணம் அவற்றில் கண்ட அரும் பொருள்களே யாகும்.

நிற்க, நாம் முன்கூறியதுபோலச் சிந்தாமணி என்ற நூலைச் சோழர் சைவராயிருந்தும் கலா விநோதத்திற்காக மகிழ்ந்து கொண்டிருந்த காலத்தில்தான் சேக்கிழார் அதன் காரணத்தை அறிந்து அக்காரணமாகச் சைவத்தில் காவியமில்லாக் குறையைப் பெரியபுராணம் இயற்றி நீக்கினார். அக்குறை நீங்கின

வுடன் அரசர்களும் ஜைனநூல்களை ஓதுதலை விடுத்துச் சைவ நூல் பாராயணம் செய்தலையும் அதனைக் கேட்டலையும் வைத்துக்கொண்டனர். பெரியபுராண ஆசிரியரான சேக்கிழாரே புராணபடனஞ்செய்ய அநபாயச் சோழர் கேட்டதை அவரது புராணத்தால் உமாபதி சிவாச்சாரியார் சொல்ல அறிகின்றோம். மேலும் கி. பி. 1181-ம் ஆண்டில் திருவொற்றியூர் படம்பக்க நாதரது ஆலயத்து மண்டபத்தில் பங்குனி உத்திரத் திருவிழாவில் சுந்தரமூர்த்தி சுவாமிகளான ஆளுடைய நம்பிகள் புராணத்தை வாசிக்க, அதனை அப்போதைய அரசனை இராஜாதிராஜ தேவ (II) சோழனும் சதுரானன பண்டிதனும் வாகீசுர பண்டிதனும் கோயில் நாயகனும் ஸ்ரீகாரியஸ்தனும் மற்றும் பலரும் வீற்றிருந்து புராண படனத்தைக் கேட்டதாகத் திருவொற்றியூர் ஆதிபுரீசர் ஆலயத்துச் சாசனம் கூறுகிறது. (செவ். 965) இச்சாசனத்தில் கண்ட புராணம் சேக்கிழார் இயற்றிய திருத்தொண்டர் புராணமாகவே யிருக்கும். ஏனெனில் திருத்தொண்டர் புராணத்தின் அமைப்பை உற்று நோக்கின் சுந்தரர் சரிதமே முக்கிய பாகமாகக் கொண்டு ஏனைய அடியார்களின் சரிதங்கள் அதினின்றும் பிரியும் கிளைகளாக வைத்துச் சேக்கிழார் எழுதியிருப்பதை அறியலாகும். அந்தக் காரணத்தைக் கொண்டே நாம் அச்சாசனமும் ஆளுடைய நம்பி புராணம் என்று கூறுகிறதாகக் கொள்ளல் வேண்டும். ஆகவே அரசியல் வர்க்கத்திலும் அதிகார வர்க்கத்திலும் சைவ சமயம் ஊன்றிவிட ஆரம்பித்தது என்றும் அதற்கு ஊன்றுகோலாக உதவியவர் சேக்கிழார் என்றும் சொல்லலாம்.

III

தென்னாட்டில் இவ்விதமாய்க் காலப்போக்கு இருந்த காலத்தில் அவதரித்த சேக்கிழார் சுவாமிகளைப்பற்றிக் கல்வெட்டுக்களில் என்ன காண்கிறோம் என்பதை இனி எடுத்து எழுதுவோம்.

வழங்கிவந்த பெயர்கள்

i. குடிப்பெயர்

சேக்கிழார் என்னும் பதம் வேளாளர் மரபில் ஒரு குடிக்குப் பெயராக இருந்தது. இன்னமும் அந்நாட்டில் ஒரு குடிப் பெயராக இருந்து வருகின்றது. இதைப்போலவே கூடல் கிழான், புரிசைகிழான், வெண்குளப் பாக்கிழான்,[1] குளத்துழான்[2] முதலிய குடிகளும் இருந்தனர். சங்கத்தார் காலத்திலும் கிழார் என்ற பதம் வழக்கத்தில் இருந்தது. கிள்ளிமங்கலம் கிழார், கோளியூர் கிழார், நல்லாவூர் கிழார், நொச்சி நியமங் கிழார், பெருங்குன்றூர் கிழார், பொதும்பில் கிழார், மருதங்கிழார், மாங்குடி கிழார் முதலிய சங்கப்புலவர்களின் பெயர்களில் இப்பதத்தைக் காண்க. இனிக் கல்வெட்டுக்களில் வருவனவற்றைக் குறிப்போம்.

1. **சேக்கிழான்** குட்டோன்—நந்திவனம் (செங். 82) கணேசர் ஆலயத்து ஒரு கல்லில் கண்ட சாசனம். இதில் சேக்கிழான் குட்டோன் என்பவன் ஒரு நந்தாத்தீபம் தானம் செய்தது கண்டிருக்கிறது. இப்பெயர் ஒரு குடிப்பெயர் ஆகும்.

2. **சேக்கிழான்** அம்மையப்பன் பராந்தக தேவன் என்ற கரிகாலசோழ பல்லவராயன்—திருக்கடவூர் (தஞ்சை 650) அமிர்தகடேசர் ஆலயத்து முதல் பிரகாரத்துத் தென் சுவர் சாசனம் - குலோத்துங்கச்சோழன் 4-ம் ஆண்டு. இதில் குலோத்துங்கச் சோழவளநாடு என்ற புலியூர்க்கோட்டத்துக் குன்றத்தூர் நாட்டுக் குன்றத்தூர்ச் சேக்கிழான் அம்மையப்பன் பராந்தக தேவன் என்ற கரிகால்சோழ பல்லவராயன் என்பான் பூதானம் செய்ததைக் கூறுகிறது. இதில் சேக்கிழார் குடியைக் காண்கிறோம். இதில் காணும் பெயரும் அருண்மொழித் தேவருடை

---

1. "குன்றத்தூர் வெண்குளப்பாக்கிழான் அரையன் தில்லைநாயக ரான நந்தியன்பன்" என்று சிதம்பரம் சாசனம் கூறும். S. I. I. IV. 227

2. காரிகைக்குளத்தூர் குளத்துழான் சிற்றம்பலமுடையான் என்று பல்லவராயன் பேட்டைச் சாசனம் கூறும். =433/1924.

யதாக இருக்கலாம் என்றும் சாசன ஆராய்ச்சிக்காரர்கள் ஊகிக்கின்றனர். சேக்கிழார் சுவாமிகளுக்கு உத்தம சோழ பல்லவர் என்ற பட்டம் உண்டு. இதில் கண்டவருக்கும் பராந்தக கரிகாலசோழ பல்லவராயர் என்ற பட்டம் உண்டு. ஆகையால் இவரே பெரியபுராண ஆசிரியராக இருக்கக்கூடும். அல்லது அவ்வமிசத்தில் வேறொருவர் அமைச்சத்தொழிலும் பட்டமும் தரித்தவராக இருத்தல்வேண்டும்.

3. சேக்கிழார் பாலறுவாயன் களப்பாளராயர்—கோட்டூர் (தஞ்சை 482) கொழுந்தீசர் ஆலயம் கர்ப்பக்கிரகத்துத் தென் அஸ்திவாரத்தில் கல்வெட்டு. குலோத்துங்கன் III-2-ம் ஆண்டு. குலோத்துங்கச் சோழவளநாட்டுக் குன்றத்தூர் நாட்டுக் குன்றத்தூர்ச் சேக்கிழான் பாலறுவாயன் களப்பாளராயர் ஒரு தீபம் வைப்பதற்காகப் பணம் தானம் செய்தது. இச்சாசனத்தினுல் சேக்கிழார் குடி இருந்ததெனவும் அதில் பாலறுவாயர் களப்பாளராயர் என்பவர் இருந்தனரெனவும் தெரிகிறது. இவரே சேக்கிழார் சுவாமிகள் தம்பி என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். பேரும் ஊரும் ஒன்றாக அமைந்திருக்கிறது. காலமும் சமீபத்தில்தான் இருக்கிறது. ஏனெனில் குலோத்துங்கன் II (1123—1146) காலத்தில் பெரிய புராணத்தார் இருந்திருந்தால் அவர் தம்பி குலோத்துங்கன் III(1178-1216) காலத்தில் இருந்திருக்கலாம் அல்லவா?

4. புரவுவரித் திணைக்களம் சேக்கிழார்—முதற் குலோத்துங்கன் காலத்தில் இப்பெயர் கொண்டார் ஒருவர் இருந்தார். இப்பெயரில் வரும் புரவுவரித் திணைக்களம் என்னும் பதத்தொடர் திருவொற்றியூர் (செங். 1011) கோயில் சாசனத்தில் அரசியல் வரி வாங்கும் அதிகாரியின் பெயரில் பிரயோகிக்கப் பெற்றிருக்கிறது. இஃது இராஜாதிராஜ தேவன்-I காலத்தது.

5. சேக்கிழான் செட்டி சங்கன் அனுராதபுரம்—இலங்கைத்தீவு—(607/1912B). ஒரு கல்லில் தமிழில் உள்ளது. சிரி சங்க போதிமாராயன் 5-ம் ஆண்டு.' இதில் சேக்கிழான் செட்டி சங்கன் என்பவன் குமாரகணத்துப் பேரூர் வாசிகள் வட்டிக்

காக 30 ஈழக்காசுகள் பெற்று நொந்தாவிளக்கு திருவமுது இவைகளுக்காகக் கொடுத்தது கண்டிருக்கிறது. (S. I. I. No 1403 Vol. 11.)

6. சேக்கிழான்—சென்னை—608/2 அதே இடத்தில் அதே அரசன் 7-ம் ஆண்டில் சேக்கிழான் சென்னை என்பான் தானம் செய்தது.

இவ்விரண்டு கல்வெட்டுகளிலிருந்தும் சேக்கிழான் என்ற குடிப்பெயர் சிங்களம் அதாவது ஈழநாட்டிலும் வழங்கி வந்தது எனத் தெரிகிறது. இச் சிரிசங்கபோதி என்ற அங்கபோதி III என்ற அரசன் மகாவம்சத்தின்படி கி. பி. 624-ல் பட்டத்திற்கு வந்தவன் (1913 E. P. 103.) இதனால் சேக்கிழார் என்ற பெயர் எத்துணைப் பழம்பெயர் என்று அறிகிறோம்.

மேற்காட்டிய மேற்கோள்களிலிருந்து சேக்கிழார் குடி தமிழ்நாட்டில் வெகு புராதன காலத்திலிருந்து இருந்து வருகின்றதென்றும், அக்குடிமக்கள் தொண்டைநாடு மாத்திரமேயன்றிச் சோழநாடு ஈழநாடு முதலிய நாடுகளிலும் வாழ்ந்து வந்தனர் என்றும், அவர்களில் அமைச்சுத் தொழில் பூண்டவர்கள் பலர் இருந்தனர் என்றும், சைவத்தில் சிறந்திருந்து ஆலயங்களுக்குத் தானங்கள் பல செய்து விளங்கினர் என்றும் அறிகிறோம்.

ii. சுவாமிகளின் இயற்பெயர்:— பெற்றோர்கள் சுவாமிகளுக்கு அருண்மொழித் தேவர் என்ற பெயர் சூட்டினார்கள் என்று அவர் புராணத்தினால் தெரிகிறது. இப்பெயர் அருண்மொழி என்பது அக்காலத்து மன்னர் வைத்துக்கொண்ட பெயர் என்று கல்வெட்டுகளால் தெரிகிறது. அதனைக் கொண்டு பெருங்குடி மக்களும் தங்கள் பிள்ளைகளுக்குப் பெயரிட்டார்கள். அரசர்கள் தாங்கள் ஆண்ட நாட்டிற்கும், ஊர்களுக்கும், அக்கிரகாரங்களுக்கும், தாம் பிரதிஷ்டித்த விக்கிரகங்களுக்கும் பெயரிட்டனர் என்றும் அடியிற் குறித்த கல்வெட்டுகளால் தெரியவரும். தாங்கள் கொடுத்த பட்டத்திலும் இப்பெயர் புகுத்தி யிருப்பதாகவும் தெரிகிறது.

முதலில் இப்பெயர் வைத்துக் கொண்ட மன்னன் இராஜ ராஜன் I என்ற பிரக்யாதி பெற்ற சோழ மன்னன். இதனைத் திருமலைச் சாசனம் ஒன்றில் *"அலைபுரியும் புனற் பொன்னி யாளுடைய சோழன் அருண்மொழிக்கு யாண்டிருபத் தொன்று வது என்றுங்" S. I. I. Vol. I. P. 95 என்றதில் காண்கிறோம். இனி 'அருண்மொழி' அல்லது 'அருமொழி' வரும் பெயர்களைக் குறிப்பாம்.

1. மனிதர் பெயர்கள்

1. அருமொழி—செங். 1055 S. I. I. II. P. 259. ஆண்களும் பெண்களும் இப்பெயர் வைப்பது.

2. அருமொழி பிரமராயன்—தஞ்சை—819. இது ஒரு பட்டம்.

3. அருமொழிப் பல்லவரையன்—இது ஒரு பட்டம். S. I. I. II. P. 495.

4. அருமொழித் தேவர்—தஞ்சை—1237. S. I.I. II. P. 260, 437. இது இராஜராஜன் I பெயர்.

5. அருமொழிதேவ மிலாடுடையார்—தென். ஆ.—718.

6. அருமொழி நிர்த்தப் பேரரசன்—S. I. I. II. P. 297.

7. அருமொழி நங்கை—வட ஆ.—49, தஞ்சை—1358, திருச்சி—886. இது வீரராஜேந்திரன் I பட்ட மகிஷியின் பெயர்.

---

*அலைபுரியும் புனற்பொன்னி ஆளுடைய சோழன்
அருமொழிக்கு யாண்டு இருபத் தொன்றுவ தென்றுங்
கலைபுரிய மதிநிபுணன் வெண்கிழான் கணிச் செக்
கரமரு பொற்சூரியன்றன் நாமத்தால் வாம
நிலைபுரியும் நிற்றகுங் கலிஞ்சிட்டு நீமிர் வைய்கை மலைக்கு
நீடேழி இருமருங்கும் நெல்விளையக் கண்டோன்
குலைபுரியும் படை அரைசர் கொண்டாடும் பாதன்
குணவீர மாமுனிவன் குளிர் வைய்கைக் கோரவேய்.
—S. I. I. II. P. 95.

ii. ஈசுவரன் பெயர்கள்

1. அருமொழி தேவ ஈசுவரர். தஞ்சை—148. தென் ஆ.—54, 925. புதுக்—397.

iii. ஊர்ப்பெயர்கள்

1. அருமொழி தேவ சதுர்வேதி மங்கலம்—கோ. 120.

2. அருமொழி தேவ நல்லூர்— செங். 111.

3. அருமொழி தேவபுரம் வட ஆ.—389. புதுக்—298—9.

4. அருமொழி தேவ தெரிந்த திருப்பரிகளத்தார் வேளம்—இது தஞ்சையில் ஒரு பாகம், S. I. I. II. P. 437.

iv. நாடு

1. அருமொழி தேவ வளநாடு. செங்—1025. தஞ்—148, 493, 721. திருச்—703.

v. அளவை

1. அருமொழி தேவ மரக்கால். செங்—972.

இப்பெயர்களினால் அரசன் பெயரை எதுகாறும் மக்கள் பாராட்டி வந்தனர் எனத் தெரியும். நமது சுவாமிகளும் இராஜ ராஜன் I காலத்திற்குப் பிந்தியவர் எனவும் தெரியவரும்..

(தொடரும்)

---

* தமிழை வளர்ப்ப தெப்படி?

[தாராபுரம் நா. ஆறுமுகம் பிள்ளை யவர்கள்.]

பழம்பெருமையைப் பலகாலும் பேசி மகிழ்வதினும் இன்றுள்ள சிறுமையை நினைந்து நீக்க முயல்வதே அறிவுடைமைக் கழகாம். ஆங்கில நன்மக்கள் தங்கள் பழம்பெருமையைப் பேசியா காலத்தைக் கடத்துகின்றனர்? ஒவ்வொரு நொடியினும் தங்கள் மொழியை வளர்க்கும் முயற்சியினன்றோ முனைந்து நிற்கின்றனர்? உலகின் எம்மொழியினும் உள்ள உயர்ந்த நூல்

---

* இஃது பல்லாவரம் பொது நிலைக் கழகப் பேரவையில் நிகழ்த்தப் பெற்ற விரிவுரையாகும்.

களை எல்லாம் ஆங்கில மொழியிற் காணலாம்; ஆங்கில மொழியி லுள்ள நூல்களை எல்லாம் பிறமொழிகளிற் காண்டல் இயலாது. இங்ஙனம் இவர்கள் தங்கள் மொழியில் எல்லா நூல்களையும் ஆக்கிக் கொண்டமையானன்றோ எளிதின் அவற்றைக் கற்றுணர்ந்து அறிவினும் ஆற்றலினும் சிறந்தோராய்ப் பல்லாயிரம் கற்றொலைவிலுள்ள நம் நாட்டையும் பிற நாட்டையும் ஆளுகின்றனர்? வாணிபம் முதலிய எல்லாத் துறைகளினும் தலைசிறந்து விளங்குகின்றனர்? இவர்தம் உயர்வுக்கு வேறெதனை ஏதுவாகக் கூறினும் இதுபோற் பொருந்துவதாகா தென்பது திண்ணம். இவர்கள் உயர்ந்த செயலைப் பின்பற்றாமல் எந்நேரமும் இழித்துரையாடி மகிழ்வர் நம்மவரிற் பலரோர். இதனாலாம் பயனென்?

ஆங்கில நன்மக்களைப் பின்பற்றி நம் இந்தியநாட்டின் வடபாலுள்ள மக்கள் தங்கள் மொழியில் ஏராளமான நூல்களை ஆக்கிக்கொண்டு சீரும் சிறப்பும் உடையோராய் இனிது வாழ்கின்றனர். தமிழினின்று தோன்றிய தெலுங்கினுங்கூட அம் மொழியாளர் பல நூல்களையும் ஆக்கிக்கொண்டனர்; ஒரு பல் கலைக்கழகமும் படைத்துக்கொண்டனர்.

நாம் நம் தாய்மொழியை வளர்க்க என்ன செய்கின்றோம்?

கண்ணுதற் பெருங்கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணிடைச் சிலவிலக்கண வரம்பிலா மொழிபோ
லெண்ணிடைப் படக்கிடந்ததா வெண்ணவும் படுமோ?

தொண்டர்நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
யுண்டபாலனை யழைத்தது மெலும்புபெண் ணுருவாக்
கண்டதும்மறைக் கதவினை யடைத்ததுங் கன்னித்
தண்டமிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்.

என்னும் பாடல்களைப் பலகாற் பாடி உரை கூறுகின்றோம்; இச்செய்யுட்கள் தமிழினருமையை நன்கெடுத் தியம்புவனவே யாயினும், இவற்றைப் பாடுவதாலும் உரை கூறுவதாலுமே நாம் தமிழை வளர்த்தவர்க ளாவேமா? தமிழில் நூல்கள் பல பல்கி விடுமா? நாம் முன்னேற்ற மடைந்துவிடுவேமா? ஒருகாலு

மில்லை. பிற நாட்டாரைக் கண்டேனும் நாம் நம் தமிழை வளர்க்க முயற்சியாம லிருப்பது அந்தோ! எவ்வளவு இழிதகைமை! சற்றே நினைந்து பார்மின்.

நம் தாய்மொழியிற் பண்டைக்காலத்துத் தண்டமிழிலக்கிய நூல்கள் சிலவே யல்லாமல் ஆங்கில மொழியேபோல் வரலாற்றுநூல் உண்டா? இயற்கைப் பொருணூல் உண்டா? உடனூல் உண்டா? உயிர்நூல் உண்டா? உழவுநூல் உண்டா? மருத்துநூல் உண்டா? வானநூல் உண்டா? பொறிநூல் உண்டா? வேறு தொழினூல் உண்டா? ஒன்றேனுமில்லையே. சிலசில வானநூலும் சிற்சில மருத்துநூலும் உளவேனும், வான நூலின் ஒன்றேனும் மேலும் மேலும் ஆராய்ச்சி செய்தற்கேற்ற பெற்றி வாய்ந்த பெருநூலாக இல்லை; அன்றியும், இவ்விருவகை நூலினும் பிழை மலிந்தன பல; பொருள் விளங்காதன பல. முசுமுசுக்கையை எண்ணெயிலிட்டுக் காய்ச்சு என்று சொல்வதனை இருகுரங்குக்கையை எண்ணெயிலிட்டுக் காய்ச்சு என்று சொன்னால் எவ்வாறு மருத்துவம் கற்பது? சொன்மின். இவ்வாறு யான் கூறுவதனால் தமிழில் மருத்துநூலே இல்லையென்று கூறியதாகவேனும், தமிழின்பால் அன்பில்லாதவனென்றேனும் எண்ணன்மின். தமிழிற் போதிய அளவு நூல்கள் இல்லையென்றே கூறுகிறேன். தமிழன்பர் பேரேட்டுப் பட்டியில் என் பேரை இறுதியிலேனும் எழுதிக்கொண்மின்.

இனி, நூல்வளம் மிகுதியாக இல்லாத தமிழை நாமேன் கற்றல்வேண்டும்? இதனை அடியோடு ஒழித்துவிட்டு எல்லாரும் நூல்வளம் மிக்க வேறு மொழியாளராக மாறிவிடல் நலமன்றோ வெனின், அன்று. சிறந்த கற்பும், இயற்கையழகும், பேரன்பும் வாய்ந்த நம் தாய் பொன்னணியும் பட்டுடையும் இலளேல் அவளைத் தள்ளிவிடலாமா? அவளுக்கு வேண்டுவன தருதல் மக்கள் கடனன்றோ? பன்னூறாண்டுகட்குமுன் இஞ்ஞான்றுள்ள நூல்கள் ஆங்கிலத்தில் இருந்தனவா? இல்லையே. ஆங்கில நன்மக்கள் ஓயாமுயற்சியானன்றோ தங்கள் மொழியில் நூல்களைப் பெருக்கிக்கொண்டனர்? நாமும் ஏன் அவ்வாறு

செய்தல் கூடாது? புதிய புதியவாகத் தோன்றும் பொருள்கட்கு ஏற்ற சொற்களைத் தமிழின்கண் காணல் இயலாதென்பீரோ? பிறமொழியி னுதவியின்றித் தனித்தியங்கும் ஆற்றல் இல்லாத ஆங்கிலம் முதலிய மொழிகளினுங்கூடப் புதிய புதிய பொருள் கட்குப் புதிய புதிய சொற்களை அமைத்துக்கொள்ளுகின்ற னரே. எல்லாப் பொருள்கட்கும் ஏற்ற சொற்களைத் தன்னகத் துக்கொண்ட தனிமொழியாய தமிழில் பொருள்கட்கேற்ற சொற்களை அமைத்தல் இயலாதென்ப தெவ்வளவு அறியாமை. நம் அறிவுக்குத் தோன்றாவிடினும் பல புலவர்களுடனுங் கூடி ஆராய்ந்தால் எல்லாப் பொருள்கட்கும் ஏற்ற சொற்களைத் தூய தனித்தமிழிலேயே அமைத்தல் இயலுமென்பது திண்ணம். தமிழில் நூல்கள் இல்லாமை தமிழின் குறை யென்றெவரேனும் கூறவியலுமா? அது தமிழராகிய நம் குற்றமல்லவா?

இந்திய நாட்டுக்கே இந்தியைப் பொதுமொழி யாக்கல் வேண்டுமென்னும் அம்மொழியாளர்தம் தாய்மொழியன்பை நினைந்து நாம் எல்லோரும் மகிழ்தல் வேண்டுமாயினும், அவர் கூற்றை நம்பித் தம் தாய்மொழியைக் கைவிடத் துணிந்த தமி ழர்தம் பேதைமைக்குப் பெரிதும் வருந்தவும் வேண்டும். மொழி நூல் வல்லாரைக் கேண்மின்; நீவிரும் ஆராய்ந்து பார்மின்; கற்பதற் கெளிமையும் கேட்பதற் கினிமையும் வாய்ந்த மொழி தமிழையன்றிப் பிறிதொன்றில்லை யென்பதை நன்குணர்வீர் கள். பன்னிப் பன்னிப் பல பேசுவானேன்? "தமிழை வளர்ப்பதெப்படி?" என்பதுபற்றி ஆராய்வாம்.

தமிழை வளர்க்கவேண்டுமேல் தமிழ்ப்புலவர்கள் ஒற்று மையா யிருத்தல் வேண்டும். ஐயகோ! நம் நாட்டில் தமிழ்ப் புலவர்களுக்குள் ஒற்றுமையென்ப தொருசிறிதும் இல்லையே. ஒரு புலவர் ஓர் ஆராய்ச்சிநூலோ, உரைநூலோ, செய்யு ணூலோ எழுதி வெளியிடின் பல புலவர்கள் மறுப்பெழுதத் தொடங்கிவிடுகின்றனரே; வில்லம்பினுங் கொடிய சொல்லம்பினை எய்கின்றனரே; கலாம் விளைக்கின்றனரே. ஒரு நூலிற் குற்ற மிருப்பின் அதனை ஏன் மறுத்தல் கூடாது? குற்றத்தை எடுத்

துக்காட்டல் உலகுக்கு நன்மை பயக்குமன்றோ? என்பார் சிலர். ஆம்; அஃது உண்மையேயாயினும், எடுத்துக்காட்டும் முறை யில்லையா? "குற்றமே தெரிவார் குறுமாமுனிவன் சொற்ற பாவினும் ஓர் குறை சொல்வரால்" உலகிற் குற்றமில்லாதவர் யார்? ஒருவர் எழுதிய நூலின்கண் குற்றங் காணின் அதனை இனிய முறையின் இன்சொற்களான் எழுதியவர்க் கெடுத்துக் காட்டித் திருத்திக்கொள்ளச் செய்தல் வேண்டும்; எடுத்துக் காட்டியும் திருத்திக்கொள்ளா திருப்பரேல் உலகம் அவர் குற்றங் கண்டு மயங்காமைப்பொருட்டு எவர்க்கும் எவ்வகையிலும் துன்பம் பயவாமுறையின் மறுப்பெழுதி வெளியிடல் வேண்டும்; இம்முறையே நன்முறையாம். நூலெழுதியவரும் தாம் எழுதியது குற்றமாயின் அதனை உடனே திருத்திக்கொள்ளல் வேண்டும். எல்லாரும் நம்மைக் கல்விக்கடல் என்று மெச்ச வேண்டும் என்னும் எண்ணத்துடன் மறுப்பெழுதுவதும் தாம் எழுதியது பிழையென்றுணர்ந்தும் தம் பெருமைக் கிழுக்கென ஒப்புக்கொள்ளாதிருத்தலும் அறிவின்மையாம்; இதனால் தம் தாய்மொழிக்கும் தாய்நாட்டுக்கும் கேடு சூழ்ந்தவராவர். தமிழ்ப் பெரும் புலவர்களே! இன்றே நுங்கட்குள் இருக்கும் பகைமையை ஒழிமின்; தீயநினைவை அகற்றுமின்; அன்பி னால் ஒன்றுகூடி அளவளாவுமின்; தமிழ் நாட்டுக்கோர் தமிழ்ப் பெருங் கழகத்தை நிலைநாட்டுமின்.

தமிழ்மொழி சிறந்த நிலையடைதற்குக் கழகமே சிறந்த வாயில். பண்டைக்காலத்துப் பசுந்தமிழ்ப் புலவர்கள் கழகங் களின் வாயிலாகவே மொழியை வளர்த்தனர். இஞ்ஞான்றும் மேனாடு முதலிய பிறநாட்டாரெல்லாரும் கழகங்களின் வாயி லாகவே தங்கள் தங்கள் மொழியை உயர்நிலை யடையச் செய் கின்றனர். நம் நாட்டில் எத்தனையோ கழகங்கள் தோன்றிச் சில ஆண்டுகள் மட்டுமே நின்று ஒழிந்தன; அவை நடை பெற்ற காலத்தேனும் தமிழ் வளர்ச்சிக்கு முயன்றனவா? ஒரு நூலேனும் வெளியிட்டனவா? இல்லையே; ஓராண்டுக் கொருமுறை கூட்டங்கூடி ஏராளமான பொருளை வீண்செலவு செய்து இரண்டொரு புலவரைக் கொண்டு இரண்டொருநாள்

விரிவுரை நிகழ்த்தி முடிவடையச் செய்தன. இதனால் ஏதேனும் பயனுண்டா?

இனியேனும் என்றும் நின்று நிலவுமாறும் தமிழ்நாட்டுக்கே பொதுவாகவும் ஒரு பெருந் தமிழ்க்கழகம் நிறுவுதல்வேண்டும்; தமிழறிவு நிரம்பிய எல்லாப் புலவர்களும், தமிழறிவுடனே ஆங்கிலம், ஆரியம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி முதலிய மொழிகளில் ஒன்றேனும் பலவேனும் உணர்ந்தவர்களும் பலதுறை நூல்களில் வல்லுநரும் அதில் உறுப்பினராக இருத்தல் வேண்டும். இக்கழகம் தமிழ்நூ லாராய்ச்சிப்பிரிவு, உரை நூற்பிரிவு, செய்யுணூற்பிரிவு, வரலாற்றுநூற்பிரிவு, மருத்து நூற்பிரிவு, வானநூற்பிரிவு முதலிய பல பிரிவுகளை உடையதாயிருத்தல் வேண்டும்; உறுப்பினர்களில் அவ்வத்துறையின் வல்லார் பலர்பால் அவ்வப்பிரிவைத் தனித் தனியே ஒப்புவித்தல் வேண்டும். இவர்களின் ஒவ்வொரு பிரிவினரும் ஆங்கிலம் முதலிய மொழிகளின் உள்ள அரிய பெரிய நூல்களைத் தமிழின் மொழிபெயர்த் தெழுதியும் தாங்களே கண்டறிந்த நுண் பொருள்களை விளக்கமாக எழுதியும் கழகப்பெருங் கூட்டத்திற் கொண்டுவந்து அரங்கேற்றிப் பலரால் ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கழகத்தின் வாயிலாக வெளியிடல் வேண்டும். இக்கழகத்திற்கு தமிழ், ஆங்கிலம், ஆரியம் முதலான மொழிகளில் வல்லுநரும் ஆராய்ச்சியிற் சிறந்த நுண்ணறிவுடையாரும் நடுநிலையாளருமான பெரியார் தலைவராயிருத்தல் வேண்டும். இவ்வாறு எல்லாரும் ஒற்றுமையாக இருந்து செய்தால் தமிழில் எண்ணில்லாத நூல்கள் பல்கிவிடும். ஒழிந்த நேரங்களில் எல்லாத் தமிழ்மக்களும் படித்துணரப் பலதுறைப் பொருளையும் விளக்கும் ஒரு கிழமைத்தாளேனும் வெளியிடல்வேண்டும்.

நூலெழுதுவார் நினைவிற் பதிக்கவேண்டுவ தொன்றுண்டு. பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்களில் ஒருசிலரேனும் தமிழ் நூல்கட்கு உரைகூறும் வன்மையுடையோரா யிருக்கின்றனரா? இல்லையே. ஏன்? தமிழ்மொழியின்கண் உள்ள பல்லாயிரக் கணக்கான சொற்களைக் கற்று நினைவின்கண் இருத்தமாட்டாமையானன்றோ? இங்ஙனமாக, இன்னும் தமிழில் அயன்மொழிச்

சொற்களைக் கலந்தால் தமிழர் எவ்வாறு தமிழ் கற்கப்போகிறார்கள்? தமிழ் எப்படி வளர்ச்சியுறும்? இதனால் தமிழில் சொற்பெருக்கம் வேண்டாமென்பதென் கருத்தன்று; ஒரு பொருள் குறிக்கப் பலசொல் வேண்டுவதில்லை யென்பதே கருத்து. பன்மணிகளால் ஆக்கிய கோவை கண்ணுக்கழகு பயப்பதுபோலப் பல அயன்மொழிச்சொற்கள் கலந்த தமிழும் காதுக்கினிமை பயக்கும் என்கின்றனர் சிலர். பவழத்தாலாகிய கோவையைப் பவழக்கோவை என்போம். பச்சையாலாகிய கோவையைப் பச்சைமணிக் கோவை என்போம். பன்மணிகளாலாய கோவையை என்னென்போம்? பன்மணிக்கோவை என்போமேயல்லால் ஏதேனும் ஒரு மணியாலாய கோவையென்று கூற ஒரு சிறிதும் ஒருப்படோம் அன்றோ? இதுபோலவே அயன்மொழிச் சொற்கள் கலந்த தமிழைத் தமிழென்று கூற ஒரு சிறிதும் ஒருப்படோம்; பிறமொழிச் சொற்களைக் கலப்பதால் நாளடைவில் தமிழ் அடியோடு ஒழிந்து வேறுமொழியாக மாறிவிடும் என்பது திண்ணம். வயிரக்கல்லின் ஒளியை மிகுதிப்படுத்த நினைந்து அதை நெருப்பிலிட்டுக் காய்ச்சுவாருளரோ? அயன்மொழிச் சொற்கள் கலந்த தமிழ் இனிமை பயவா தென்பதனை மணிப்பிரவாள நடையே வலியுறுத்தும். இப்போதே பலர் தமிழ் தனிமொழியன்று; வடமொழியினின்று தோன்றிய தெனக் கூறுகின்றனர். தமிழ்நூற் கடலின் கரைகண்டுணர்ந்த சுவாமிநாத தேசிகரே

"...... ....தமிழ் நூற் களவிலை யவற்று
ளொன்றே யாயினுந் தனித்தமி ழுண்டோ
வன்றியு மைந்தெழுத் தாலொரு பாடையென்
றறையவே நாணுவ ரறிவுடை யோரே."

என்று தமிழியல்புக்கு மாறுபடக் கூறுவரேல் மற்றவர்களைப் பற்றிச் சொல்வானேன்? இஞ்ஞான்று எண்களெல்லாம் ஆங்கிலத்திலேயே குறிக்கப்பெறுகின்றன; சில தமிழ்ப் புலவர்களுங் கூடத் தமிழ்க் கணக் கறியார்; ஆயிர மாகாணி அறுபத்திரண்டரை யென்றால் இந்தக் கணக்கு எங்களுக்குத் தெரியா தென்பர் மாணவர். (தொடரும்

*திருவாசகமும் பரஞ்சோதிமுனிவரும்

(திரு. அ. மு. சரவண முதலியா ரவர்கள்)

திருவாசக மென்பது தனக்கு ஒரு வாசகமும் இணையின்றித் தன்னை ஓதினவர் உள்ளத்தே சென்று தெள்ளமுதுந் தேனும் பாலுமாய்த் தித்தித்து, அவர் மனத்தைக் கரைத்து மலத்தைக் கெடுத்து, ஊனை உருக்கி, உணர்வைப் பெருக்கவல்லதொரு அன்பு நூலாகும்.

அதனை, வாதவூரின்கண் போதவடிவினராகத் தோன்றி, அருந்தவர் நிறைந்த பெருந்துறை புகுந்து, குருந்துறு நீழலிற் றிருந்துறு மறைமுடிச் செம்பொரு ளனைத்தும் நம்பனிடத்துக் கொள்ளைகொண்ட வள்ளலாகும் மணிவாசகனார் மலர்வாய் ஒழுகிய யானெனதற்போக்கும் தேன்யா றென்ப.

பரஞ்சோதிமுனிவ ரென்பார் ஆண்டவன் ஆலவாயின்கண் அடியார்களின் பொருட்டு ஆடியருளிய அறுபத்து நான்கு அருள் விளையாடல்களையும் 'திருவிளையாடல்' எனப் பெயரிய நூலாகப் பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய பாவலர் பெருந்தகையாகும்.

இம்முனிவர் பெருமான் அத்திருவாசகமென்னுந் தேன் கடலில் எங்ஙனம் திளைத்தாடித் தேக்கெறிந்தாரென்பதை ஆய்ந்து முடிப்பதே இக்கட்டுரையின் கருத்தாகும்.

கருவாசம் போக்குந் திருவாசக ஆசிரியராகிய வாதவூர் வள்ளலின் வரலாற்றைக் கூறுவன (இக்காலத்தெழுந்த உரை நடை நூல்களன்றி) ஐந்து நூல்கள். அவை பழைய திருவிளையாடல், திருவிளையாடற்புராணம், திருவாதவூரர் புராணம், திருவுத்தரகோசமங்கைப் புராணம், திருப்பெருந்துறைப் புராணமென்பன. இவற்றுள் திருவுத்தரகோசமங்கைப் புராணத்தில் †அடிகளின் முன் வரலாற்றுக் குறிப்பு மட்டும் கூறப்பட்டுள்ளது. திருப்பெருந்துறைப்புராணம் அண்மைக் காலத்திலிருந்த மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களாற்

---

* இது பல்லாவரம் பொது நிலைக் கழகப் பேரவையில் நிகழ்த்தப் பெற்ற விரிவுரையாகும். † அடிகள் என்பது மணிவாசகனாரை.

பாடப்பெற்றுள்ளது. முன்னுள்ள நூல்கள் மூன்றிலும் அடிகள் வரலாற்றுப் பகுதிகள் சிற்சில ஒன்றோடொன்று முரண்பட்டுக் காணக்கிடக்கின்றன. அவை தம்மைச் சிக்கறுத்துத் துணிந்து நாம் கோடற்குரிய பொருள் இதுதானென்று உயர் திரு. மறைமலையடிகள் தங் கூர்த்த மதியாற் பல ஆண்டுகள் ஆராய்ந்து முடிவு கட்டி யிருப்பதை அவர் தம் "மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்" என்னும் அரிய தனித்தமிழ் நூலின் கண் பரக்கக் காண்க. இங்கு நாம் எடுத்துக்கொண்ட பொருள் "பழைய திருவிளையாடல் ஆசிரியராகிய வேம்பத்தூர் நம்பி, திருவாதவூர் புராண ஆசிரியராகிய கடவுண்மா முனிவ ராகிய இவ்விருவரினும் திருவிளையாடற் புராண ஆசிரியராகிய பரஞ்சோதி முனிவரென்பார் திருவாசகத்தில் நிரம்பவும் பயிற்சி பெற்றவர்" என்பதேயாதலின் அத்துறையிற் செல்லுவேமாக.

பரஞ்சோதி முனிவ ரியற்றிய திருவிளையாடற் புராணத்தில் ஆளுடைய அடிகளோடு தொடர்புடைய நான்கு படலங்களிலும் பிற இடங்களிலும் திருவாசகக் கருத்துக்கள் பலவும் தொடர்கள் பலவும் அடிகள் பலவும் செறிந்து காணப்படுகின்றமையும், ஏனைய இரண்டு நூல்களிலும் அத்துணைக் காணப்படாமையுமே மேற்கூறியதற்குப் போதிய சான்றாகும்.

அடிகள், 'இறைவனது இன்னருளைப் பெறுதற்கு யான் எவ்வாற்றானும் தகுதியுடையனல்லேன்; அங்ஙனமிருக்கவும் அப்பெருங்கருணை யுடைய பெம்மான் அருட்குரவனாகி எளிவந்து என்னை வலிய ஆண்டுகொண்டு எனக்கு ஆராத இன்பம் அளித்த செயல்,

"பெரியார்க்குச் செய்யுஞ் சிறப்பினைப் பேணிச்
சிறியார்க்குச் செய்து விடுதல்—பொறிவண்டு
பூமே லிசைமுரலு மூர வதுவன்றே
நாய்மேற் றவிசிடு மாறு"　—பழமொழி, ௭௫.

என்றாங்கு 'நாய்க்குத் தவிசிட்டதை ஒக்கும்' எனக்கருதி இக் கருத்தைத் தாமருளிய திருவாசகத்தின்கண் ஆறு இடங்களிற் கூறியருளுகின்றார். அவ்விடங்களும் அக்கருத்துடைய பாட்டுக்களும்,

" கேட்டாரு மறியாதான்................நாயினுக்குத் தவிசிட்டு நாயினேற்கே காட்டாதனவெல்லாங் காட்டி................" (திருச் சதகம், உஅ).

" ஒன்றாய் முளைத்தெழுந்து..................நன்றாக வைத் தென்னை நாய்சிவிகை ஏற்றுவித்த, என்தாதை.................." (திருக்கோத்தும்பி, அ).

" பூமேலயனோடு................நாய்மேற்றவிசிட்டு................" (ஷை., உ௰.)

" நானாடியணைவான்...............நாய்க்குத் தவிசிட்டு...... ...." (உயிருண்ணிப் பத்து, உ.)

" கற்றறியேன்..............போற்றவிசு நாய்க்கிடுமோ றன்றே ...." (திருவேசறவு, ரு).

" செம்மைநல மறியாத................நாய்சிவிகை யேற்று வித்த..............." (அச்சோப்பதிகம், கூ).

என்பன. அறுநூற்றைம்பத்தெட்டு அருட்பாக்களுக்குள் இங்ஙனம் ஆறு இடங்களிற் கூறப்பட் டிருப்பதைக் கூர்ந்து நோக்கின் அவ்வடிகளது திருவுள்ளத்தின்கண் இக்கருத்து இடையறாது நின்று நிலவிக்கொண் டிருந்ததென்பது ஒருதலை. இவ்வரிய கருத்தை அடிகள் கூற்றாக வைத்து வேம்பததூர் நம்பியேனும் கடவுண்மா முனிவரேனும் தங்கள் நூலில் யாண்டுங் கூறிரைல்லர்.

இனி, ஆண்டவன் அருட்குரவனாகப் போந்து அடிகளுக்கு அரும்பொருளை அறிவுறுத்தி அடியார்களோடும் மறைந்தருளிய பின்னர் மணிவாசகப் பெருந்தகையார் வருந்தும் பகுதியில்,

"கனவில்வருங் காட்சியெனக் கருணைமூர்த்தி காட்டி
மறைத்தலு மன்பர் கலக்கத் தாழ்ந்து
நனவுகொல்லோ கனவுகொல்லோ வின்றுநாதன்
ஞமலிக்குத் தவிசீட்ட நலம்போ லென்னை
நினைவரிய திருமேனி காட்டியாண்டு நீத்ததையென்
றையுற்று நெஞ்சஞ் தேறி

இனவடியா ருடன்கூட்டா தேகினுயே யென்னேயுமென்
　　வினையையுமிங் கிருத்தி யெந்தாய்.''
(வாதவூரடிகளுக் குபதேசித்த படலம், ௯௪)

என அடிகள் கூற்ருக வைத்துப் பரஞ்சோதி முனிவர் இக் கருத்தைப் பாராட்டி யிருப்பதுடன் ''இன்ன போழ்து தான் ஆளுடைய அடிகட்கு இவ்வரிய கருத்துத் தோன்றியிருக்க வேண்டும்'' எனத் தங் கூர்ந்தமதியா லாய்ந்து அறிந்து கூறி யிருப்பது போற்றத் தகுந்த தொன்ருகும்.

இன்னும் இச்செய்யுளின் ஈற்றடியாகிய ''இனவடியா ருடன் கூட்டா தேகினுயே என்னேயுமென் வினையையுமிங் கிருத்தி யெந்தாய்'' என்பது திருவாசகத்தில்,

''மானேர் நோக்கி'' என்று தொடங்கும் பாட்டிலுள்ள ''போனுரடியார் பொய்யும் யானும் புறமே போந்தோமே'' என்னும் அடியையும், ''பொருத்த மின்மையேன்'' என்ற தலைப்பையுடைய பாட்டிலுள்ள, ''அருள்செய் யன்பருநீயுமங் கெழுந்தருளி யிங்கெனே, இருத்தினுய் முறையோவென் னெம்பிரான் வம்பனேன் வினைக்கிறுதி யில்லையே'' என்னும் அடிகளையும் தழுவியிருத்தல் காண்க.

இன்னும் பரஞ்சோதி முனிவர், ஆண்டவன் அடியாரோ டும் மறைந்தருளியதன் பொருட்டு அடிகள் வருந்தும் அப்பகு தியிலேயே,

''வஞ்சவினைக் கொள்கலமா முடலைத் தீவாய் மடுக்கிலேன்
　　வரையுருண்டு மாய்ப்பே னல்லேன்
நஞ்சொழுகு வாளாலுங் குறைப்பே னல்லே னுதனேயதுவு
　　நினதுடைமை யென்றே
அஞ்சினேன் தானேயு மழியாதாவி யையனே
　　நினைப்பிரிந்து மாற்ற கில்லேன்
என்செய்கோ வெந்தாயோ வெந்தாயோவென் றிரங்கினுர்
　　புரண்டழுதா ரினைய சொல்வார்.''
(வாதவூரடிகளுக் குபதேசித்த படலம், ௯௫)

என்று படிப்போருள்ளம் பாறையாயினும் நெக்குவிட்டுருகு மாறு கூறியிருப்பது திருவாசகத்திலுள்ள,

"வினையென் போலுடை யார்பிற ராருடை யானடிநா யேனைத்
தினையின் பாகமும் பிறிவது திருக்குறிப் பன்றுமற் றதனாலே
முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்து நான் முட்டிலேன் றலைகீறேன்
இனையன்பாவனை யிரும்புகன்மனஞ் செவியின்னதென் றறியேனே"
(திருச்சதகம், ௩௭)

"ஓய்விலாதன வுவமனிலிறந்தன வொண்மலர்த் தாடந்து
நாயிலாகிய குலத்தினுங் கடைப்படு மென்னை நன்னெறி காட்டித்
தாயிலாகிய திருவருள் புரிந்தவென் றலைவனை நனிகாணேன்
தீயில் வீழ்கிலேன் திண்வரை யுருள்கிலேன் செழுங்கடல் புகுவேனே."
(ஷை, ௩௧.)

"அறுக்கிலே னுடல்துணிபடத் தீப்புக்கார்கிலேன் றிருவருள் வகை
யறியேன்
பொறுக்கிலேனுடல் போக்கிடங் காணேன் போற்றி போற்றியென்
போர்விடைப்பாகா
இறக்கிலே னுனைப்பிரிந்தினி திருக்கவென் செய்கே னிதுசெய்க
வென்றருளாய்
சிறைக்கணேபுனல் நிலவிய வயல்சூழ் திருப்பெருந்துறை மேவிய
(செத்திலாப் பத்து, ௬) [சிவனே."

என்னுந் திருப்பாட்டுக்களின் கருத்துக்களை முற்றுந் தழுவி நிற்றல் காண்க.

இன்னும் அப்பரஞ்சோதியார் பாடலிலுள்ள 'நாதனே நினதுடைமை யென்றே அஞ்சினேன்" என்னுந் தொடருக்கு,

"அன்றே யென்றனுவியு முடலுமுடைமை யெல்லாமுங்
குன்றே யனையா யென்னை யாட்கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோ ரிடையூ றெனக்குண்டோ வெண்டோண்முக்க ணெம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ விதற்கு நாயகமே."
(குழைத்த பத்து, ௭)

என்னுந் திருவாசகச் செய்யுள் ஆதரவாதல் காண்க.

மறித்தும் மேற்காட்டிய பகுதியிலேயே அடிகளின் கூற்றாக வைத்து 'வஞ்சவினை' என்று தொடங்கும் பாட்டை அடுத்துப் பரஞ்சோதி முனிவர்,

"வறியவனு மொருபிறவிக் குருடன் கையில்
　　வந்தபெரு விலைபோன் மழலை தேருச்
சிறியவனு மொருமதலை கையிற்கொண்ட
　　செம்பொன்மணி வள்ளம்போற் றேவர் யார்க்கும்
அறிவரியாய் சிறியேனை யெளிவந்தாண்ட
　　வருமையறியேன் றன்பத்தழுவத் தாழப்
பிறிவறியா வன்பரொடு மகன்றாய் கல்லாப்
　　பேதையேன் குறையல தெம்பிரா னுலென்னே"

எனக் கூறுகின்றார். இச்செய்யுளிலுள்ள "மழலைதேருச் சிறியனு மொருமதலை கையிற்கொண்ட செம்பொன்மணி வள்ளம்போல்" என்னும் தொடர் திருவாசகத்திலுள்ள,

"மையிலங்குநற் கண்ணிபங்கனே
　　வந்தெனைப்பணி கொண்டபின் மழக்
கையிலங்குபொற் கிண்ணமென்ற
　　லாலரியை யென்றுனைக் கருதுகின்றிலேன்."

என்ற அடிகளையும், "பிறிவறியா வன்பரோடு மகன்றாய்" என்னுந் தொடர் திருவாசகத்தில் அடைக்கலப்பத்து கூ-வது செய்யுளிலுள்ள "பிறிவறியா வன்பர் நின்னருட் பெய்கழற் றாளிணைக்கீழ், மறிவறியாச் செல்வம் வந்து பெற்றார்" என்னும் அடிகளையும், "கல்லாப் பேதையேன் குறையல தெம்பிரானு லென்னே" என்னுந் தொடர் திருவாசகத்தில் "என்னலறியாப் பதந்தந்தா யானதறியாதே கெட்டேன், உன்னலொன்றுங் குறைவில்லை" என்ற அடிகளையும், "வான் பாவிய" என்ற முதற்குறிப்பையுடைய பாட்டிலுள்ள, "நான் பாவியனானுனை நல்காயெனலாமே" என்னும் அடியினையும் சொல்லாலும் பொருளாலும் முற்றுந் தழுவிச் செல்லுமாறு காண்க.

இனி, அடிகள் "முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே, பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே" என அருளிச் செய்ததைப் பரஞ்சோதி முனிவர், "முன்னு முதுபொருட்கு முன்னு முதுபொருளாய்ப் பின்னும் புதுமைக்கும் பின்னுகும் பேரொளியாய்" எனக் கூறிச் செல்கின்றார்.

இன்னும் அடிகள்,

"குழைத்த சொன்மாலை கொண் டருள்போற்றி"

"ஆவாவென்ன ஆசைப்பட்டேன் கண்டாயம்மானே"

"பஞ்சேரடியாள் பாகத்தொருவா பவளத்திருவாயால்
அஞ்சேலென்ன ஆசைப்பட்டேன் கண்டாயம்மானே"

என அருளியவற்றை முறையே,

"பாவார் தென்சொற் பனுவன்மாலைப் பணிகொண்டாய்"

"ஆவாவென்று யஞ்சேலென்று யறனேயோ"

"பஞ்சேரடியாள் பாகாகூடற் பரமேட்டி
அஞ்சேலென்றுயிதுவோ வருளுக்கழகையா"

என அடிகள் கூற்றுகளைத் தப் பரஞ்சோதிமுனிவர் பகரும் பாட்டுக்கள் சொல்லாலும் பொருளாலும் ஒத்திருத்தல் காண்க.

இன்னும் பரஞ்சோதிமுனிவர்,

"காவிநேருங் கண்டா நாயிற் கடையான
பாவியேனைப் பொருளாக்கொண்டென் பணிகொண்டாய்
ஆவியோடிவ்வுடலு நினதேயன்றோவின்(று)
ஓவிவாளாதிருந்தாலா ரென்னுடையானே"

என்று கூறிய செய்யுளிலுள்ள 'பொருளாக் கொண்டேன் பணி கொண்டாய்" என்பது திருவாசகத்திலுள்ள 'பொருளா வென்னைப் புகுந்தாண்ட பொன்னே' என்பதையும், 'ஆவி யோடிவ் வுடலு நினதேயன்றோ' என்பது 'அன்றே யென்றனுவி யும்' என்று தொடங்கும் பாட்டையும் ஒத்திருத்தலுடன், 'நாயிற் கடையாம் நாயேனே' என்னுந் தொடர்போலத் திருவாச கத்தில் சற்றேறக்குறைய அறுபத்தேழு இடங்களில் வரு தலையுங் காண்க.

"அத்தவோ கல்லாக் கடையேனையாட் கொண்ட
பித்தவோ பொய்யுலகை மெய்யாகப் பேதிக்குஞ்
சித்தவோ சித்தந் தெளிவித் தெனைத்தந்த
முத்தவோ மோன மயமான மூர்த்தியவோ"

என அடிகள் கூற்றுகளைத் தப் பரஞ்சோதியார் பாடியதிலுள்ள 'கல்லாக் கடையேனை' என்பது திருவாசகத்துக் 'கல்லாமனத்

துக் கடைப்பட்ட நாயேனை’ ‘கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை’’ என்னுந் தொடர்களையும், ‘கடையேனை யாட்கொண்ட பித்தவோ’ என்னுந் தொடர் ‘தாதாய் மூவேழுலகுக்குந்தாயே நாயேன்றனை யாண்டபேதாய்’ என்பதையும், ‘சித்தந் தெளிவித்து எனைத்தந்த’ என்பது ‘சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட’ என்பதையும் தழுவிச் செல்லுதல் காண்க.

இனி, ‘எங்கெழிலென் ஞாயிறு’ என அடிகள் ‘திருவெம்பாவை’யிற் கூறியதைப் பரஞ்சோதி முனிவர் பிட்டுவாணிச்சி கூற்றாக வைத்து ‘இரவியெங்கெழுக’ என்று கூறியிருப்பதுங் கருதத் தக்கதாகும்.

மேற்காட்டிய பரஞ்சோதியார் பாடல்களெல்லாம் அடிகள் வரலாற்றைக் கூறுவனவாகிய ‘வாதவூரடிகட்கு உபதேசித்த படலம்’ ‘நரி பரியாக்கிய படலம்’ ‘பரி நரியாக்கிய படலம்’ ‘பிட்டுக்கு மண் சுமந்த படலம்’ ஆகிய நான்கினு முள்ளன. இதிற் றொடர்பில்லாத ‘விருத்த குமார பாலரான படல’த்தில் ‘இல்லார்க்குக் கிழியீடு நேர்பட்டாலென’ எனப் பரஞ்சோதியார் பகர்ந்தது ‘கீழ்ச் செய்தவத்தால் கிழியீடு நேர்பட்டு’ என்னுந் திருவாசகத்தேனை நுகர்ந்தென்க. எனவே மேல் எடுத்துக் காட்டியவற்றால் திருவாசக மென்னுந் தேன் கடலிற் பல்காலுந் திளைத்து அப்பாக்கள் பலவற்றையும் நினைவிற் பதித்து வைத்திருந்தவர் பரஞ்சோதி முனிவரென்பது புலனாகின்றது.

அறிவுவல்லானொருவன் தன்னாற் காணப்படாத ஒருவனது சிலமொழிகளையோ, அல்லது அவனியற்றிய நூல் ஒன்றையோ பல்காலும் கூர்ந்து கூர்ந்து ஆராய்வானாயின், அதன்பயனாக அவனது உள்ளம், உரை, உருவ முதலிய அனைத்தையும் மக்களுக்கு மாண்புற வரைந்து காட்டிவிடுவானென்பது ஒருதலை. அங்ஙனமே பரஞ்சோதிமுனிவராம் எஃகறிவினரும் திருவாசகப் பயிற்சிச் சிறப்பால் கூர்ந்த தமது அறிவென்னுந் தூரியங் கொண்டு, கள்ளமற்ற உள்ளமென்னும் படத்தில் அடிகளின் அருள்வடிவத்தை வரைந்துவைத்து வழிபட்டு வந்தாரென்பது திருவிளையாடற் பாயிரத்தில்,

"எழுதரு மறைகடேறா விறைவனை யெல்லிற்கங்குல்
பொழுதறு காலத்தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமேலேறத் துளும்புகண் ணீருண்மூழ்கி
அழுதடி யடைந்தவன்ப னடியவர்க் கடிமை செய்வாம்."

என ஆளுடைய அடிகளைத் துதிப்பதால் நன்கு புலனாகின்றது. 'திருவாதவூர்ச் சிவபாத்தியனருளிய மணிவாசகத்தி லுள்ள மாண்புறு ஆதாரவுகள் எத்துணைகொண்டு பரஞ்சோதியார் இப்பாடலைப் பகர்ந்தனர்' என ஆராயின், அஃது நமக்கு ஓர் வியப்பையும் மகிழ்ச்சியையும் அரன்கழல்மாட்டு அயரா அன்பினையும் விளைக்குமாகலின், அத்துறையிற் செல்லுவேமாக.

இச்செய்யுளின் திரண்ட பொருள் 'அடிகள் ஆண்டவனை அல்லும் பகலும் வழிபட்டு அழுது அவன் அருட்கழலை யடைந்தார்' என்பதாகும்.

இச்செய்யுளின் ஈற்றடியிலுள்ள 'அழுதடி யடைந்த அன்பன்' என்பது அழுது, அடி, அடைந்த, அன்பன் என்ற நான்கு சொற்கள் மூன்று சந்தியால் முடிந்ததாகும். 'செய்து' என்னும் வாய்பாட்டு வினையெச்சம் பலவேறு பொருள்கள் பயக்குமாகலின் ஈண்டுவந்த 'அழுது' என்னும் அவ்வினையெச்சத்திற்குத் திருவாசகக் கருத்துடன் மாறுபடாத பொருள் கொள்ளின், 'உண்டு வலிபெற்ற சாத்தன்' என்புழிப்போலக் காரண காரியப்பொருளில் வந்ததாகக் கொண்டு, 'அழுதமையால் ஆண்டவனடியை அடைந்த அன்பர்' எனப் பொருள் காணவேண்டும்; அங்ஙனங் காணுங்கால் 'ஆண்டவன் அடிப்பேற்றுக்கு அழுதல் ஒரு சாதனம்' என்பதும், 'அடி அடைந்தார்' என்பதும், 'அன்பர்' என்பதுமாகிய மூன்று பெரும் பகுதிகள் நமக்கு வாய்க்கின்றன. ஆகலின், அவற்றை நிரலே எடுத்து ஆராய்வோம். (தொடரும்)

* சமய விளக்கம்

[திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை யவர்கள்]

'சமயம்' என்ற சொல்லின் பல பொருள்களுள் ஒரு பொருள் 'வழி' என்பது. நெறி என்ற சொல்லும் அப்பொருளையே சுட்டும். எதற்கு வழி யென்னில், துன்ப நீக்கத்திற்கு அல்லது இன்பப்பேற்றிற்கு, என்க. துன்பம், தடை அல்லது இடையூறு காரணமாக வருவது; இன்பம், விருப்பம் நிறைவேறப் பெற்ற காலை எழுவது. மக்கள் தமது விருப்பங்களைத் தடையின்றித் தமது முயற்சியால் நிறைவேற்றிக்கொள்ளும் ஆற்றல் உள்ள வரை, கடத்தற்கரிய துன்ப மொன்றையும் உணர மாட்டார்கள். தமது உழைப்பிற்குத் தீராத்தடை அல்லது பயனின்மை உண்டாய காலை, தம்மினும் மேம்பட்டதாகக் கருதும் ஒரு பொருளின் அல்லது பல பொருள்களின் உதவியை அவர்கள் நாடுவர். நாடுங்கால், அவற்றைத் தம்மைப் போன்ற இயல்புடையனவாக நினைப்பர். வெயிலிலே சென்றவர்கள் மரநிழலை நண்ணியவுடன் நிழலின் இனிமையை உணர்ந்து அதனை நல்கு மரத்தின்மாட்டு விழைவுடையராதல் கூடும். தம்மைப்போல அஃதும் ஓர் உயிர்ப் பொருளெனவும், உயரத்தில் தம்மினும் அது பெரியதெனவும் கருதி. அதற்குத் தமது தாழ்மையைக் குறிக்கும் வணக்க மியற்றுதலுங் கூடும்.

மக்களுள் பொல்லாங்கு விளைப்பார், தம்மை யஞ்சி வணங்குவார் மாட்டு இரக்கம் வைப்பதைக் கண்டவர்கள், தமக்குக் கீழ்ப்பட்ட உயிர்களுள்ளும் பிறவற்றுள்ளும் அஞ்சத் தக்கனவாயும் ஊறு செய்வனவாயுமுள்ள நாக முதலியவற்றை அஞ்சி வணங்கின், அவைகள் இடையூறு விளைக்க மாட்டா, என்ற கருத்துப்பற்றி அச்சத்தால் அவற்றை வணங்குவர். இறந்துபோன உறவினரை மக்கள் கனவிற் காண்டலால் அன்னோர் மண்ணுலகை நீத்தபின் பிறிதோரிடத்தில் உறைவரென

* இது பல்லாவரம் பொது நிலைக் கழகப் பேரவையில் நிகழ்த்தப் பெற்றவிரிவுரையாகும்.

வும், அவர்கள் மக்களினு மிக்க ஆற்றலுடைய ரெனவும், தாம் தங்கும் உலகினின்று இவ்வுலகுக்கு வருதல் கூடுமெனவும் எண்ணிய மாந்தர் இறந்த தமது உறவினரை வழிபட்டு, அவர்கட்கு உவப்பெனக் கண்டவற்றைப் படைத்தல், ஆடை சாத்துதல், மாலை சூட்டுதல், இசை முழக்குதல் முதலியனவு மேற்கொள்வா ராயினர். எப்போது மக்கள் இயற்கைப் பெருஞ் சுடர்களை யாதல், இயற்கைச் சிறு பொருள்களை யாதல், இறந்த உறவினரை யாதல், பிற பெரியோரை யாதல் வழிபடத் தொடங்கினார்களோ, அப்போது சமயமென்பது உலகிலே தோன்றிய தென்னலாம். மக்கள் மன அறிவின் வளர்ச்சியே, சமய வுணர்ச்சிக் கடிப்படை. அஃதே அவர்களை விலங்கு முதலிய கீழ்ப்பட்ட உயிர்களினின்றும் பிரித்து வேறுபடுத்துவது.

உலகப் பயன்களாகிய பொருள், அதிகாரம், இன்பம், நோய் நீக்கம், போர் வெற்றி முதலியன கருதி, அவற்றை நல்க வல்லன என நம்பப்பட்ட சிறு தெய்வங்களை வணங்கும் நெறியே, நாகரிக முதிராத மக்கள் வகையார் பலருள்ளும் உலகெங்கணுங் காணப்படும். பண்டைக் காலத்திலும் இத்தகைய சமயமே பல இடங்களிலும் நிலைபெற்றிருந்தது. அப்போது மக்கள் பெரும்பாலும் உலக வாழ்வு காரணமான முயற்சிகளிலே பொழுது கழித்தனர். சமயச் சார்பிலே இத்தெய்வம் சிறந்த பயன் கொடுக்கும் அத்தெய்வம் உயர்ந்த உதவி யளிக்கும் என்ற அத்துணையே வெவ்வேறு தெய்வ வழிபாட்டினர்க்குள் பிணக்கு ஏற்படலாமே யொழிய, தெய்வத்தி னியல்பு பற்றிய வாதங்கள் அந்நிலையில் நிகழ இடமில்லை. ஏனெனில், தெய்வ வியல்பை ஆராயும் ஆராய்ச்சி மக்கள் அறிவு வளரப் பெற்ற காலை நிகழ்வது. பல்வகை மக்கட் குலத்தாருள் இணக்கமோ, போரில் வெற்றியோ, ஏற்பட்ட போது, அவர்கள் வழிபட்ட தெய்வ வணக்கங்களின் கலப்பு ஏற்பட்டிருத்தல் கூடும். அச்சத்தாலோ, அன்பினாலோ, பல தெய்வங்களைப் பயன் கருதி மக்கள் வழிபட்டபோது, அவரவர் வழிபாட்டின் உண்மைக்குத் தக்கவாறு ஒரு கடவுளே அவ்வத் தெய்வங்கள் வாயிலாகப் பயனளிப்பன் என்பது பெரியோர் கொள்கை.

எவ்வெவர் தம்மையேனும் யாவரே யெனினும போற்றின்
அவ்வவ ரிடமாய்நின்றே அவர்க்கருள் செய்வாய் போற்றி.

என்றது காண்க.

ஐம்பொறி வாழ்க்கையில் ஈடுபட்ட உயிர்கள் கடவுளைத் தாமே யறியமாட்டா. கடவுளும் தன்னை அவர்கட்கு அந் நிலையி லுணர்த்தவு முடியாதாகலின், அவரவர் சிற்றறிவுக் கெட்டிய வழிபாட்டிற்குப் பயனளித்தல் வாயிலாகப் படிப்படியாகச் சமய வுணர்ச்சியைத் திறம் பெறுவிக்கின்றனன் போலும்.

நாளடைவில் மக்களுள் அறிவு முதிரப் பெற்றார் உலகப் பொருளின் உண்மை யியல்பினை அறிந்து, உலகிற்கு வேறாக அதனை நடத்தும் முதல்வன் ஒருவன் உளனென ஊகித்துணர்ந் தனர். செவ்விய அறிவு பெறாதவர், முதல்வனுண்மை யுணராது முடிந்த பொருள்களை வெவ்வேறாகக் கண்டன ரென்க.

தெய்வ உண்மை தெளிந்தாருள்ளும், அதன் இயல்பைப் பற்றிப் பல்வேறு கொள்கையுடைய பல்வே றறிஞர் தோன்றினர். கடவுளோ அளவு கடந்த பெருமை யுடையவன், உயிர்களோ சிற்றறிவுடையன ஆதலின், பல்வேறு கொள்கைகள் எழுத லியல்பே. "நெறிகள் தாம் பலவுமாய் அந்தந்த நெறிக்காச் செறியுந் தெய்வமும் பல பல ஆகவுஞ் செறிந்தால், அறியுந் தன்மையிங் காருனை" என்ற தாயுமானர் அருண் மொழி நோக்குக.

'சமயங்கள் பிணக்குறும் பிணக்கை—யாவரே
முடிவெண்ண வல்லார்'

என்றது மஃதே. எங்கு நிறை கடவுளின் தன்மையைப் பல சமயத்தார் பலவாறு கூறுவதைத் தாயுமானர் ஒரு திருப்பாட்டிற் குறித்தமை காண்க.

அன்னேயனே யெனுஞ் சிலசமய நின்னையே
ஐயா வையா வென்னவே
அலறிடுஞ் சிலசமய மல்லாது பேய்போல
வலறியே யொன்று மிலவாய்ப்
பின்னேது மறியாம லொன்றைவிட் டொன்றைப்
பிதற்றிடுஞ் சில சமயமேல்

பேசரிய வொளியென்றும் வெளியென்று நாதாதி
  பிறவுமே நிலய மென்றும்
தன்னேரி லாததோ ரணுவென்று மூவிதத்
  தன்மையாங் கால மென்றும்
சாற்றிடுஞ் சிலசமய மிவையாகி வேறதாய்ச்
  சதாஞான வானந்த மாய்
என்னேஎனே கருணை விளையாட் டிருந்தவா
  றெம்மனோர் புகல வெளிதோ
இகபர மிரண்டனிலு முயிரினுக் குயிராகி
  யெங்கு நிறைகின்ற பொருளே !

உண்மையின் ஒரு பகுதியைக் கண்டவர்கள், மற்றொரு பகுதியைக் கண்டவர்களோடு கலக்குங்காலை இரு பகுதியும் வெவ்வேறு தன்மையனவா யிருப்பின், அவர்க்குள் கருத்து வேறுபாடு நிகழும். அஃதே சமயப் பிணக்கிற்குக் காரணமாவது. உண்மையின் பெரும் பகுதி யுணர்ந்தார்க்கும், அதன் சிறு பகுதி யுணர்ந்தார்க்கும் போர் விளைதலும் இனைய காரணம் பற்றியே. அறிவும் ஒழுக்கமு முடையார் மாட்டுக் கருத்து வேறுபாடு தீங்கு விளையாதிருத்தல் கூடும். ஏனையோருள் பெருங் கலகத்திற்கு அஃதே காரணமாகும். காய்தல் உவத்தல் அகற்றி உண்மை யாராயும் பலரும் தத்தங் கொள்கைகளை ஒப்பிட்டுப் பார்ப்பின் பெரும்பயன் விளைதல் திண்ணம். ஓந்தியின் நிறத்தைப் பற்றிக் கருத்து வேறுபாடுற்ற இருவருள், ஒருவர் அது பசிய நிறமுடைய தென்றும், மற்றொருவர் அது நீலநிற முடைய தென்றும் வாதித்தனர். மூன்றா மனிதனொருவன் அவ்விருவரையு மறுத்து அது கருப்பு நிறமுடைய தென்றனன். அவன் அதைத் தெளிவு படுத்த வெண்ணித் தன் பையிலிருந்த கோம்பியை வெளியே யெடுத்தபோது மூவரும் அது வெண்ணிறத்ததா யிருந்தமை கண்டு வியப்புற்று, அது ஒவ்வொரு பொழுதில் ஒவ்வொரு நிறங்காட்டு மியல்பிற்றெனத் தெரிந்தடங்கினர். அவ்வாறே ஒத்த ஆராய்ச்சியுடைய பல்வேறு சமயத்தினர் தத்தங் கொள்கைகளை ஒற்றுமைப் படுத்தி உண்மை தேர்தல் கூடும்.

நடுவுநிலைமை பற்றி உண்மையை ஒருங்கு ஆய்தலை மேற்

கொள்ளாத பல சமயத்தினரும் தத்தங் கொள்கைகளே சிறந்தன வென வற்புறுத்துதல் இயற்கையாதலின், மணிவாசகனார்

சமயவாதிகள் தத்தமதங்களில்
அமைவதாக அரற்றி மலைந்தனர்

என்றருளினர்.

வெவ்வேறு கடவுட் கொள்கையினர், தத்தங்கருத்திற் கேற்ற ஒழுக்க முதலியனவற்றைச் சமைத்து, அதாவது, செப்பஞ் செய்து தம் மதம் நிறுவுவ ராதலின், 'சமையம்' என்ற சொல்லே சமயமென மருவிற் றென்றலு மொன்று.

ஒவ்வொரு சமயத்தாரும் தத்தங் கொள்கைகளைச் சிறப்பாகத் தக்க காரணங்களோடு எடுத்து மொழியுங்கால், அவற்றுள் தமக் கொத்ததைத் தழுவி நடப்பார் சிலர். வேறு சிலர் உண்மையறிய முடியாது கலக்கமுறுவர். மணிமேகலையுள், சமயக் கணக்கர் பலரும் தத்தங் கோட்பாடுகளை இயம்பக்கேட்டு மணிமேகலை புத்தமதக் கொள்கை தனக் கொத்திருந்தமையால் அச்சமய வொழுக்கத்தைக் கடைப்பிடித்தனள். இது எதனை உணர்த்துகிற தென்றால், ஒவ்வொரு சமயமும் சிற்சில உயிர்கட்கு ஒத்ததா யிருக்குமென்பதனையே.

சமய ஆராய்ச்சியாற் கலக்கம் ஏற்பட்டுக் கவலையுளதாவதை மணிவாசகனார்

உலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாம்
சவலைக் கடலுளனாய்க் கிடந்து தடுமாறும்
கவல்

என்றமையா லறிக. அத்தகைய கலக்கத்தால் கைக்கெட்டிய பயன் யாதும் பெறாது, உள்ளக்கொதிப்பே நிகழ்தல் கூடுமாதலின் தாயுமானார் 'பன்னெறியாம் பாலைவனத்தில் விட்ட பாவமென்னோ' என்றனர். இன்னும் அவர் கூறுவதாவது

பூதலய மாகின்ற மாயை முத லென்பர் சிலர்
பொறி புல னடங்கு மிடமே
பொருளென்பர் சிலர் கரண முடிவென்பர் சிலர் குணம்
போன விட மென்பர் சில பேர்

நாதவடி வென்பர் சிலர் விந்துமய மென்பர் சிலர்
நட்ட நடுவே யிருந்த
நாமென்பர் சிலர் உருவ மாமென்பர் சிலர் கருதி
நாடி லரு வென்பர் சிலபேர்
பேதமற வுயிர் கெட்ட நிலையமென் றிடுவா சிலர்
பேசி லரு ளென்பர் சிலபேர்
பின்னு முன்னுங் கெட்ட சூனியம தென்பர் சிலர்
பிறவுமே மொழி வரிவையாற்
பாதரசமாய் மனது சஞ்சலப் படுமலாற்
பரமசுக நிஷ்டை பெறுமோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே

என்றனர். ஒரு சமயத்தில் நின்று அதன் வழி யொழுகின் அதன் பயன் கைவரும். அது குறைவுடைத்தாயின் அதற்கு மேற்பட்ட பயனை ஒருவன் நாடுதல் கூடும். அப்போது அதனின் மேம்பட்ட சமயத்தைக் கைப்பற்றுதல் உண்டாம். அவ்வாறே படிப்படியாய்ச் சமய ஏணிகளை ஏறிச் சமயங் கடந்த முழுமுதலைக் காண்டல் கூடும். அவ்வாறின்றி ஒருவன் தான் அறிந்த கொள்கையே சிறந்ததென வாதம் நிகழ்த்துவதை மாத்திரம் மேற்கொண்டால், பிறசமய வுண்மையு முணராது தஞ் சமயப் பயனுங் கைவந்து மேற்செல்லாது, வாத நிலையிலேயே நிற்றல் நேரிடும். அதனால் முழுமுதலை யறிதல் ஒருகாலு மியையா தென்பர்.

'வாதமிடு பரசமயம் யாவுக்கு முணர்வரிய
மகிமைபெறு பெரிய பொருளே.'

என்றார். வாதமிடுஞ் சமய நெறிக் கரியதாகி என்றதும் அது. சமய வாதிகளின் போருக்கு யானை கண்ட குருடர் கதையை உவமை கூறுப. அக்கதை யாவரு மறிந்தமையால் அதனை விரித்திலம். யானையின் காலினைத் தடவிப் பார்த்தவன் யானை தூண் போல்வதெனவும், அதன் வாலைத் தடவினவன் அது விளக்குமாறுபோ லிருந்ததெனவும், அதன் காதைத் தொட்டவன் அது முறம்போ லிருந்ததெனவும், வாதிப்பாராயினர். காலைத் தடவி

னவன் யானையின் காதையும் வாலையும் உறுப்புக்களையும் தடவிப் பார்ப்பானாயின் தன் கொள்கை குறைபாடுடையதென உணர்வன். அவ்வாறே பிற குருடரு முணர்வர்.

பன்னூல் கூறுஞ் சமய நெறி நின்று படிப்படியாய் மேற் செல்லுவார், சமய வியல்பினை நன்குணர்வர். 'புறச்சமயநெறி நின்றும் அகச் சமயம் புக்கும், புகன் மிருதி வழி யுழன்றும் புகலு மாச்சிரம அறத்துறைகள் அவை படிந்தும்' என்றதுமது. ஒரு துணையாற்றின் நீரோட்டத்தைப் பின்பற்றிச் செல்லுபவன் அது சென்று சேரும் பேராற்றினை அடைவன். பின்னர் அப் பேராறு சென்று வீழுங் கடலினைத் தலைப்படுவன். துணைச் சிற்றாறுகள் பேராற்றில் விழுந்து கடல் சேரலும் பேராறுகள் நேராகச் சென்று கடல் புகலுங் காண்டும். அனைய தன்மை சமயங்கட் கிருத்தலின், 'பல பல மதமு மீற்றின் ஒருவழிப்படலும் போலும்', 'நதியுண்ட கடலெனச் சமயத்தையுண்ட பர ஞான ஆனந்தவெளியே', 'ஆறொருத்திலங்கு சமயங்களாறுக்கு மாழ்கடலாய்' என்ற திருவாக்குகள் எழுந்தன. சமயங்களெல்லாம் ஆறுகளாமெனின், ஆறுகள் கடலிற் சென்றபின் தமது வடிவமிழந்து முடிவு பெற்றாங்கு சமயங்களும் ஓரெல்லையிற் சென்று முடிவெய்தும். ஆற்றினெல்லைக் கப்பாற்பட்ட கடலானது அளவிலாது பெரிதாயிருப்பது போல, சமய வெல்லை கடந்த முழுமுதலானது சமயம் அளவிடா ஆனந்தவடிவாயிருக்கின்றது.

அந்த ஆனந்தப் பெருங்கடலிலே திருவருட் டுணையாய புணையின்றிச் செல்லுதலியலாது. "நின்னருள் கொண்டறிவதல்லால் நெறிவேறுண்டோ" என்றதுமது.

(தொடரும்)

*அறஞ் செய்வது எதற்கு?

[திருக் கபசம் எழுதியது]

பிள்ளைகள் விளையாடுவது எதற்கு? என்ற கேள்விக்கு விடை பகர்வோமாயின், அறஞ் செய்வது எதற்கு என்ற கடாவிற்கு விடை கண்டவராவோம். நோயாலும், உறுப்புக்குறைகளாலும் ஆற்றலிழந்த சிறாரைத் தவிர்த்து, விளையாட்டில் விருப்பமில்லாப் பிள்ளைகளில்லை என்றே சொல்லலாம். இளமையின் விளையாட்டை முதுமையில் நினைந்திரங்கிய புலவரொருவர் உளங் கரையும் வகையிற் பின்வருமாறு புலம்புகின்றார்.

இனிநினைந் திரக்க மாகின்று; திணிமணற்
செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்
தண்கய மாடு மகளிரொடு கைபிணைந்து
தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி
மறையென லறியா மாயமி லாயமொ
டுயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து
நீர்நணிப் படிகோ டேறிச் சீர்மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர்க் குடத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்து மணற்கொண்ட கல்லா விளமை
யளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ?
தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூதாளரே மாகிய வெமக்கே. (புறம். 243)

யார்தா னிங்ஙன மிரங்கார்? வாழ்க்கையின் நுகர்ச்சிகளால் உடல்தளர்ந் துளஞ்சோர்ந் தல்லற்பட்டு நிற்குமொரு முதுமகன் கூடக் கண்களில் நீர் பெருகச் சிரித்துக் குதித்து விளையாடுமொரு, சிறுவனின் நிலைகண் டகங்குழையாதிரான். வாழ்க்கையின் இன்னல்களையுங் கவலைகளையு மிச்சிறுவ ரின்னு முணரவில்லை. இரும்பு போலுளத்தில் வந்தழுந்துந் துன்பங்களை யவர்கள் கன

* இஃது பல்லாவரம் பொது நிலைக் கழகப் பேரவையில் நிகழ்த்தப் பெற்ற விரிவுரையாகும்.

விலும் மின்னுங் காணவில்லை. செயற்குரியன செய்யாது விட்டதை நினைந்து கழிவிரக்கப்பட்டுக் கண்ணீர் சொரியு நிலையை யவர்க ளடையவில்லை. ஏற்ற காலத்தி லவர்களு நெஞ்சுபுண்ணாகி வருந்தினும் வருந்துவர். வாழ்க்கையின் காலையொளியில் திகழ்கின்ற விவர்க ளிப்பொழுது ஆடிப்பாடி மகிழ்ந்திருத்தல் நன்று.

பிள்ளைகள் ஏன் விளையாடுகிறார்கள்? பிள்ளைகள் விளையாடு தற்குக் காரணம் விருப்பமே. அவ்விருப்ப மெப்படியுண்டாகின்றது என்போமாயின், விளையாட்டி லவர்கள் பெறுமின்பமே யவ் விருப்பத்திற்குக் காரணமென்று காண்கின்றோம். இளவயதிற் பிள்ளைகள் விளையாடாவிட்டால், அவர்களுடைய அகஉறுப்புக் களும் புறஉறுப்புக்களுந் தக்கமுறையில் வளர்ச்சிபெறா. இன்றி யமையாத அவ்வளர்ச்சியின்பொருட்டுப் பிள்ளைகளுக்கு விளை யாட்டி லின்ப முண்டாகின்றது. ஆயினும், உறுப்புக்களின் வளர்ச்சியைக் கருதி விளையாடுகின்ற பிள்ளையு முண்டோ? இன்பங் கருதிச் சிறுவர்கள் விளையாடும்பொழுது, உறுப்புக்களின் வளர்ச்சி அவர்க ளறியாமலேயே நிகழ்கின்றது. இங்ஙனமே உயிர்வளர்ச்சியின்பொருட் டறஞ் செய்யப்படும். ஆனாலது பயன் கருதி நிகழ்வ தன்று. பிள்ளைகளின் விளையாட்டைப் போலவே யஃது மின்பங் காரணமாய் நிகழ்கின்றது. பிள்ளை களுக்கு, 'விளையாட்டை விரும்பு' என்று சொல்லவேண்டிய தில்லை; இயற்கையாயவர்களுக்கு இவ்விருப்ப முண்டு. ஆனால், உயிரின் வளர்ச்சிக் கடிப்படையாகிய அறமென்பதையும் விருப் பத்தா லவர்க ளியற்ற வேண்டுமென்பதை வற்புறுத்த, 'அறஞ் செய விரும்பு' என்று கற்பித்தல் வேண்டப்படுகிறது.

உயிரின் வளர்ச்சி யாது? தேய்வு யாது? என்றிப்பொழு துற்று நோக்குவாம். தம்மு ளொன்றுக்கொன்று முரண்பட்ட இரு நிலைகளையுந் தன்மைகளையு மொருங்கே யுடைத் திவ்வுலகு. இன்பமுந் துன்பமும், அன்பும் பகைமையும், அருளும் வெகுளியும், அமைதியுங் கொந்தளிப்பும், தூய்மையு மழுக்கும் ஆகிய பலவகை நிலைகளும் ஈண்டடுத்தடுத்துத் தோன்றுகின்றன. எதிர்த்து நிற்குமிவ் விருகூற்றுத் தன்மைகளையும் ஒளி, இருள்

என்பவற்றுளடக்கலாம். ஏனெனின், ஞாயிற்றினொளி யில்லா விடின், எங்ஙனமுடல் வளர்ச்சியில்லையோ அங்ஙனமே, அன்பும் அருளும் வாய்மையு முயற்சியுமில்லாவிடின் உயிர் வளர்ச்சியு மில்லை. பொய்யும் பகையும் வெகுளியும் அளவு மீறிப் பெருகி டின், மக்கட் கூட்டமே யொழியும். பொதுவாக எல்லோராலும் விரும்பப்படுவன இன்பம், அன்பு, உண்மை முதலியனவையே. நோயுற்ற பிள்ளைகள் விளையாட்டை விரும்பாததுபோல், இவற்றை விரும்பாத மக்களுமுளர். ஒளியின் பாலனவாகிய தூய்மை வாய்மை அன்பு ஆகியவற்றில் பயில்தலே அறநிலையாம். அதுவே உயிரின் தேய்வின்னமென்பது சொல்லாது பெறப்ப டும். ஒளி வளர்ந்து இருள் நீங்கின் உயிர் முதிர்ச்சிபெறும். ஆனா லத்தகைய ஒளியின் வளர்ச்சியு மிருளி னீக்கமு மெல் லோர்பாலு நிகழ்ந்த ஒருகால முலகி லிருந்ததாகத் தெரிய வில்லை. அந்நிலை அறத்தின் நிறைவாகும். நிறைவென்பதை (பூரணத்தை) நாமீண்டுக் காண்பரிது. அந்நிறைவை நாமெதிர் பார்க்கின்றோம்.

ஓரழகிய குரலைக் கேட்போமாயின், அக்குரலையுடையவன் அழகிய முகமும் உறுப்புகளு முடையவனா யிருக்க வேண்டு மென்றுதான் நாம் நினைக்கிறோம். நேரிலவனைக் காணுங்கால், அவன் விரும்பத் தகுந்த முகமிலாதவனா யிருப்பின், அதிலொரு குறைவிருப்பதாக நாமுணர்வது யாதுபற்றி? அரிய நூலெழு தியவரொருவர் நொண்டியாகவோ, செவிடராகவோ விருந்தால், அதிலொரு அமைதியின்மை தோன்றுவதேன்? அகத்துறுப்புக் களுக்கேற்றவாறு புறவுறுப்புகளும், புறவுறுப்புக்களுக்கேற்ற வாறு அகத்துறுப்புகளு மமைந்திருக்க வேண்டுமென்று நாம் விரும்புகின்றோம். அத்தகைய பொருத்தம் நாம் பெரும்பாலுங் காணப்பெறுகின்றிலம். ஆதலின், ஒளியு மிருளுங் கலந்த வ்வ் வையக நிலை நமக்கு அமைதியளிப்பதில்லை. இது கொண்டு குறை நீங்கிய வேறு நிலைகள் வகுக்கப்பட்டன.

கட்புலனாகிய இவ்வையகத்தைக் கொண்டு காணாதவற் றைக் கருது முறையில், இருள், துன்பம், மடி முதலியவை தம்மு

ளொன்றுகூடிய வொரு கீழ் நிலையும், ஒளியு மின்பமு முயற்சியு மொன்றிய வொரு மேல் நிலையும் பிறக்கின்றன. இவற்றை முறையே கீழுலகம், மேலுலகமென்பர். கீழ் மேலென்பன இழிவுஞ் சிறப்பும் பற்றி வந்தன. ஏனெனின், உலகிற்கப்பால், எல்லையற்ற பெருவெளியில் கீழுமில்லை, மேலுமில்லை. உலகிற் கொளிதருவனவாகிய ஞாயிறுந் திங்களும் விண்மீன்களும் நமக்கு மேலே தோன்றுவதை நோக்கி, ஒளியுலகை மேலிருப்பதாகக் கருதினர் போலு முன்னோர். நிறைவு கருதி யெழுமிந் நிலைகளை யாராய்வாம்.

ஒளி இன்பந் தருவதாயினும், அதை விலகி இருளை நாடும் பறவைகளும் விலங்குகளு முள. ஆந்தை, கூகை, பாம்பு, தேள், எலி, வௌவால் முதலியவை இவற்றுட் சிலவாம். பாம்புந் தேளுங் கீழுலகிற் பெருகி யிருக்கின்றனவென்று உடற்றுன்பத்தையும் புறவிருளையும் மறக்கவியலாதார் கூறுவார். பாம்புந் தேளு மிருளை நாடுவதேன்? அது அவற்றி னியற்கை. ஒளியை நுகர்வதற்குக் கருவியாயிருப்பது கண். ஆனால், ஒளியை நுகரவிடாமற் கண்ணை நெடுநாளாக மூடுவோமாயின், வெளிச்சத்தாலக்கண் இடர்ப்படுமேயன்றி இன்ப மெய்தாது. வட அமெரிக்காவில், கென்றக்கி (Kentucky) எனுமிடத்தில், ஒளி நுழைபறியாத பெரிய குகை யொன்றிலுள்ள நீரில் வாழு மீன்களுக்குப பார்வையில்லை என்பதை உயிர்நூலறிஞர் குறித்திருக்கின்றனர். அங்குள்ள மீன்களுக்கு வெளித்தோற்றத்திற்குக் கண்களைப் போல் தெரிவனவாகிய இரு கரும் புள்ளிக ளிருக்கின்றன. ஆனால், விரித்துக் காட்டுங் கண்ணாடியின் வழியாக நோக்குங்கால், இவை கண்கள்போல் தோன்றுவனவே யன்றிக் கண்களல்ல வென்பது நன்றாக விளங்குகின்றது. ஈண்டுக் காட்டிய நீர்வாழு முயிர்கள் வெளிச்சத்தைக் காண விடம் பெறாமையால், விழிகள் பெற்றுங் காட்சியிலவாயின. புறக்கண்ணை ஒளியில் வைத்துப் பயிற்சி செய்யாவிட்டால் நாளாவட்டத்தி லது சுருங்கி, இறுதியிற் பார்வையிழந்துவிடு மென்பது திண்ணம். புறத்தில் தோன்றி நிற்குமிவ் வுண்மை அகத்திற்கு முரித்தே. அவா, வெகுளி, அழுக்காறாகிய இருளிலேயே பயிலும் மக்க

ளது அகக்கண் குருடாகுமென்பதை எடுத்துரைக்க வேண்டுஞ் சொல். இவர்கள் கீழ்நிலையடையாது மற்றென் செய்வார் ?

பயிற்சி யில்லாமையாலகக்கண் குருடாவ துண்மையாயின், ஏற்ற பயிற்சியாலது முன்னைவிட நன்றாகக் காணுமாற்றல் பெறுதல் கூடுமன்றோ ? முயற்சி, பயிற்சி என்பன கீழிருந்து மேலேறுதற் கின்றியமையாதனவாம். எத்துறையினும் வெற்றி பெறுதற்கிவையே வழிகளாம். கீழே விழுதற்கு முயற்சி வேண்டியதின்று. உயரச் செல்லவிடாமல் யாவற்றையுந் தடுக்கின்ற நிலத்தினது ஈர்க்கு மாற்றல்போல் (gravitation) உயிரைக் கீழேயிழுக்கின்ற வொரு வலியுண்டு. இதை மலமென்ப. இயற்கையாகவே இது ஒவ்வொருளத்திலு முளது. ஒளி நோக்கி மேற் செல்லு முயிரின் முயற்சியைக் கீழ்நோக்கி யிழுக்குமிருள் தடை செய்கின்றது. இங்ஙனமொளிக்கு மிருளுக்கும் போர் நடக்கின்றது. அமரர்க்கு மரக்கர்க்கு நிகழ்ந்தனவாகப் பழைய நூல்களில் கூறப்பட்டிருக்கும் போர் பெரும்பாலு மிதையே குறிக்கும். இப்போரே அறம்; இதில் ஒளி பெறும் வெற்றியே வீடு.

மேற்கண்ட இருள்நிலை ஒளிநிலை ஆகியவற்றுள் ஒளிநிலை யொன்றிற்கே வழிகூற வியலும். இருளுட் காட்சியின்மையின தற்கு நெறிகூறுதலு மின்று. அகக்கண்ணாகிய உயிரின்பார்வை நுட்பம் பெறுதற்குப் பயிற்சி வேண்டும். இருளிலிருந்து திடீரென்று வெளிச்சத்தைப் பார்க்குங் கண்கள் கூசியொடுங்குமாறு, ஐம்புல நெறியிற் சென்ற காட்சி எங்கு நிறைகின்ற பேரொளிக்கு நேராகத் திரும்புங்கா லிடர்ப் படும். ஆதலினது சிறுகச்சிறுக ஒளியை யேற்று ஒளியிலொன்ற வேண்டும். ஒளிக்குச் செல்லு நெறிக ளிருபான்மையன வென்றார். அவை இல்லறந் துறவற மெனப்படும். 'மனத்துக்கண் மாசிலனாத லனைத்தறம்' என்ற வள்ளுவர் கூற்றில், அழுக்கு அல்லது இருளை நீக்குதலே அற மெனப்பட்டமை காண்க.

இருள் நிலை, இருளு மொளியுங் கூடிய நிலை, ஒளி நிலை என்ற மூன்றிற்கு மியைந்து நிற்கு முளப் பான்மைகளைச் சற்

றாராய்வாம். ஒருவன துளப்பான்மை இத்தகைத்தென்று முடிவு கூற லெவர்க்கு மரிது. ஏனெனின், செய்கையில் வெளிப்படு மளவே நாம் ஒருவன துளத்தை யுணரக் கூடும். செய்கையில் வெளிப்படா தெழுந்தொடுங்கு நினைவுகளு முணர்ச்சிகளும் பலவாம். இவை முற்றறி வுடையோனுக்கே புலனுவதன்றி நம்போல்வார்க் கெட்டுந் தன்மையன வல்ல. ஆதலின், எடுத் துக் காட்டாக நாமீண்டுப் பார்க்கப் போகின்ற உளநிலைகள் நாம் கொண்ட கருத்திற் கேற்றவாறு நுட்பமின்றி வகுக்கப் பட்டன வென்று கொள்க.

முதலாவது :—

பிறருடைமையைத் தனதென வெளவு முளம்.

உண்பதற்கு மணிவதற்கும் வேறு வகையில் நுகர்வதற்கு முரிய பொருள்கள் பல வுலகிலுள. இவற்றை நுகரவெழும் விருப்ப மெல்லோர்க்கு முண்டு. அவ்விருப்பை நிறைவேற்றிக் கொளற்கு ஆளப்படு முறைகளோ அவரவ ருளப்பான்மையை யொட்டி நிற்கின்றது. குற்றத்தி னீங்கிய வழியிற் செல்வமீட்டி நுகர்வதற்குரியவற்றைத் தனதாக்கிக் கொளலே ஒளி விளங்கு கின்ற உயிர் கையாடு முறையாகும். ஆனலிது எளிதிலாவ தன்று. இதற்குப் பொறுமையு மூக்கமு மின்றி யமையாதன. இது போர் முறை. அவாவெனு மிருளால் மூடப்பட்ட உயிரோ தான் விழைவதைப் பெறுதற் பொருட்டுக் குறுக்கு வழி தேடு கின்றது. நெருக்கமான, நீண்ட ஒளி நெறியிற் செல்லும் வருத்தங் கண்டஞ்சி இவ்வுயிர் 'விலங்ககன்ற' நெறி நாடுகின் றது. விலங்கு வேறென் செய்யும்? வீட்டுள் நுழைய வாயில் வழியாயிருக்கச் சுவரை யிடித் துள்ளே செல்வதும், நூலேணி கொண்டு கூரையிலேறி யுள்ளிறங்குவதும் விலங்குகளின் செய்கை யாம். பெரும்பாலு மித்தொழில்க ளிரவிலேயே நிகழ்த்தப் படுகின்றன. கொன்று தின்னுங் கொடுமாக்கள் இரவில் வெளிப் பட்டுத் திரியுமல்லவோ? வெருளியா லுளமிருண்ட நிலையி லித் தகையர் உயிர்க் கொலைக்கு மஞ்சுவதில்லை. ஆன லிதைவிடக் கொடிய செய்தி மற்றொன்றுண்டு. பொதுமக்களுக் கறிவு

விளக்கம் பிறந்திடின், அதனாற் றமது வருவாய் குறையுமென நினைத்துப் பொய்க் கதைகளாலுங் கட்டளைகளாலு மறிவின் வளர்ச்சியைத் தடுக்க முயல்வாருங் கொலைஞரே யாவர். அறிவாகிய விளக்கை யவிக்கு மிவர் தொழில், கொலையாவதல்லது வேறென்னும்? இவர்களெல்லாம் புறப்பொருளில் மயங்கி அகப்பொருளை யிழந்தாராவர். இவர்களுளம் பிற மக்களுளங்களோடு போயொன்றுவதில்லை; ஒன்றுமாயின், பிறர் துன்பத்தைத் தமது துன்பமாகக் கொள்வர் அதற்குரிய வொளி யவர்கள்பா லில்லை. ஓட்டமில்லா தோரிடத்திற் றங்கிய சின்னீரைப் போலிருக்கு மிவர்க ளுள்ளம் நாற்ற மெடுக்கத்தான் செய்யும். இந்நீர்மையர் கீழ் நிலையைத் தாமாகவே தேடிக் கொள்கின்றனர். அவர்களை இருள் நிலைக்குட் புகுத்துமொரு ஆற்றல் அவர்கட்கு வெளியே யில்லை. தாங்களே அவ்வாற்றலாகின்றார்கள். ஒவ்வொருவனு மிவ்வுலகிலெதை நச்சுகின்றானோ அதுவே யாகின்றான். இருளை நச்சியவர் இருளிற் புகுந்தால் அஃதிறும்பூ தாகுமோ?

இரண்டாவது :—

தனைதத் தனதென விறுகப் பற்றிக்கொ ளுமுளம்.

இப்பெற்றியர் இருளை நச்சுகின்றவரு மல்லர்; ஒளியை விழைகின்றவரு மல்லர்; இரண்டையுந் தழுவி நிற்கின்றவர்களே. உலகிற் பெரும்பான்மையோரான மக்க ளிவ்வினத்தைச் சேர்ந்தவ ரென்பது சொல்லாமலே பெறப்படும். இவர்கள் தானென்ற தன்னிலை அல்லது தன்மையை விட்டு, முன்னிலைக்கு வரக் கூடியவர்கள். இருளை யொட்டிய நினைவுகளும் ஒளியை யொட்டிய உணர்ச்சிகளு மிவர்க ளுளத்தி லெழுந்து செயலில் வெளிப்பட்டும் வெளிப்படாமலு மொடுங்கிவிடும். இருளி லெழுந்தது இவர்களைத் தடுப்பது அச்சம்; ஒளியிலிவர்கள் செலவொட்டாது தடுப்பது இவர்கள துடைமை. பிறர் பொருளை இவர் கவராவிடினும், எளிதிலிவர் தமது பொருளைப் பிறர்க்குக் கொடார். கொடுப்பதற் கிவ ருடன்படுவதா யிருந்தால், அதனாற் றமக்கு அண்மையிலோ சேய்மையிலோ கைம்மாறு யாதாயினு முளதோ வென்று கணக்கிட்டுப் பார்ப்பார்.

கோயில் கட்டுவதற்குங் குளம் வெட்டுவதற்கும் ஊட்டிட மமைப்பதற்கு மிவர்களுட் பலர் பொரு ளுதவுகின்றனர். நமது நாட்டில் இப்பான்மையதாகிய பொரு ளுதவியை மிகுதி யுங் காண்கின்றேம். இஃது ஒளி நெறியென்று நமக்குத் தோற்றும். இம்மைப் புகழும் மறுமை யின்பமும் கருதிப் பெரும்பாலு மிவ் வுதவிகள் பிறப்பதை நாமறிவோம். இது பண்ட மாற்றும் வகையிற் சேருமேயன்றித் தூய அறவழி யாகாது. கள்ளருந் தங் கரும முடிப்பான் தந்தெய்வத்திற்குக் கள்ளுங் கோழியு முதவுகின்றனர். வாய்மையுந் தூய் மையு மறிவு விளக்கமும் வளர்ந்தோங்கப் பொருளை வழங் கலே யறமாவதல்லால், பத்துப்பொன் கொடுத்தால் அது நூறு பொன்னுய்த் தமக்கு வருமென்றும், கருத் தெவ்வாறுயினுந் தாங்கொடுத்த அச் செய்தியினுலேயே மறுமையிற் றமக்குப் பெருமை யுண்டென்றும் நினைப்பது அறமன்று. இதை 'அறவிலை வணிகம்' என்றுர் புலவர். 'பொருளென்னும் பொய் யாவிளக்க மிருளறுக்கும்' என்ற உண்மையை யிவர்களுணர் வார்களாயின், தங்கள் கருத்துக்கேற்ற மேலுலக நெறியைக் கூறுகின்ற படிற்றெழுக்க மாந்தருக் கிவர்தம் பொருளை வாரி யிறைத்து வருந்தார். இருள் கலந்த ஒளியை நாடு மிவர்க ளெங் ஙன மிருள் நீக்கங் கருதி யமைக்கப்படுங் கழகங்களுக்குத் தமது பொருளை யுதவுவர் ? எங்ஙன மிவர்கள் கல்வியாகிய ஒளியை வளர்ப்பர் ? 'மேலுலக மில்லெனினு மீதலே நன்று' என்று வருங்குறளின் பயனறிவர்கொல் லிவர் ? தன் பயன் கருதியோ ஞாயிறு நாடோறுங் கிழக்கி லெழுகின்றது ?

மூன்றுவது :—

தனதைப் பிறர்க்குரியதெனக் கொளுமுளம்.

தன்னிழப்பென்று சிறப்பிக்கப்படும் அரிய தன்மை இங்கு விளங்குகின்றது. இது நாம் முதலாவது கண்ட உளப் பான் மைக்கு நேர்முரணுவது. தனது நலத்தை யிழந்தன்றே தாய் தன் குழந்தையை வளர்க்கவேண்டியதாகின்றது ? இளைப் பாறியிருக்கும் நேரத்தையுந் தூக்கத்தையும் வெற்றுரை யாடுங்

காலத்தையு மிழந்தன்றோ ஒருவன் பிறரைக் காட்டினு மிகுந்த வறிவைக் கூட்டுதற்குக் காலங் காண்கின்றான்? குழந்தையின் பொருட்டுத் தன் நலத்தைத் தாய் மகிழ்ச்சியுட னிழக்கின்றாள். உடலை வருத்தியு மறிவைப் பெறுதலை அறிஞ னின்பமாகவே கருதுகின்றான். இங்ஙனமே, ஒளிபெற்ற மக்கள், வையகத்தின் துன்பத்தையு மயக்க நிலையையுங் கண்டுள முருகித் தமதுடைமையே யன்றித் தம்மையு மிழக்க வுடன்படு கின்றனர். இந்தவர்களுக் கின்பமே தருகின்றது. ஆதலின், தமதுடைமையையுந் தம்மையு மவர்க ளிழக்குங்கால், அரியதொன்றைச் செய்தோமென்ற வுணர்ச்சியின்றி, இனிதாக, எளிதாகத் தஞ்செயலை நிகழ்த்துகின்றார்கள். வானளாவிய, பனிமூடிய, மலைமுடியிலிருந் திழிந்து, வரவர அளவிற் பெருகி, வழியிலுள்ள நீர் நிலைகளையுஞ் சிற்றோடைகளையுந் தன்னு ளீர்த்துக்கொண்டு, குறிஞ்சியையு முல்லையையும் விட்டு மருதத்துள் நுழைந்து, தன் னிருபுறமுமுள்ள நிலங்களைச் செழிப்பாக்கி மகிழ்வித்து, மக்கள் நெருங்கி வாழ்கின்ற நகரங்களுடே யோடி, அவர் வேட்கை தீர்த்து, அழுக்கை நீக்கி யழுக்குற்றுத் தூய்மையாகி, இறுதி யிற் றன் பிறந்தகமாகிய பெருங்கடலை யவாவிச் செல்கின்ற தண் புன லாறுபோ லிருக்கின்றனர், ஈண்டு நாம் கருது முளப் பான்மை யுடையார். உயரவிருந்து தோன்றுமுயிரும் அறஞ் செய்தோடி ஒளிக்கடலுட் பாயும்.

---

* கல்வி

[காழி. சிவ. கண்ணுசாமி B. A.]

கல்வியே இயற்கை யறிவின் சாணைக்கல்

கல்வி என்ற சொல் கல் என்ற பகுதியி னடியாகப் பிறந்த தொன்றாகும். அறியாமையை யகற்றி அறிவை வளரச் செய் வது என்பதே அதன் பொருள். "கல்சர்" (Culture) என்ற மேனாட்டுச் சொல் கல்வி என்னும் பொருளைக் குறிக்கும் ஒப்

---

* இந்து திரு சிவ. கண்ணுசாமி யவர்களால் 11-10-1931-ல்

புமை வியந்து சிந்திக்கற் பாற்று. பிரான்சு தேயத்தில் பன்றி களுக்கும் ஆடு முதலியவைகட்கும் "கல்வி கற்பிப்பது" (Educating the Pigs and the Sheep) என்ற மொழிப் பிரயோகம் வழக்காற்றில் இருக்கிறதாகத் திரு. வில்லியம் காபெட் என்பவர் தாமெழுதிய "இளைஞர்ப் புகட்டு" என்ற நூலில் குறித்திருக்கிறார். இதனால் ஐயறிவு படைத்த அக் கால்நடைகளின் அறிவையும் ஒரு சிறிது திருத்தி இனியந்தவாறு வளரச் செய்வதற்கும் கல்வி யென்றுதான் பெயர் என்பது பெறப்பட்டது. எனவே, இயற்கையாய் யாவர்க்கும் அறிவு அமைந்துள்ள தென்றும், அது பெரும்பாலும் அறியாமை என்ற படலத்தால் போர்க்கப் பட்டுள்ள தென்றும், கல்வி யென்னும் ஒளியைக் கண்டதும் அப்படலம் மாய்கின்றது என்றும், மாசு நீங்கவே அறிவு மணி யெனத் திகழ உற்றதோர் வசதியைப் பெறுகிற தென்றும் உய்த்துணரல் வேண்டும். சுருங்கக் கூறுமிடத்து, கல்வி இயற்கையறிவு தீட்டும் சாணைக்கல்லேயாகும்.

பொதுப் பிரிவு

கல்வியை மேனாட்டார் "The Three R's", அதாவது, Reading, Writing & Arithmetic என்ற முப்பகுதி யுடையதாகக் கொள்கின்றனர். நம் முன்னோர்களோ எண்ணும் எழுத்தும் என இரண்டே பிரிவுடைத்தாகப் பகுத்துக் கூறி யிருக்கின்றனர். கணக்கும் எழுத்தும் என்ற பொதுப் பிரிவுகள் இரண்டே இயற்கை யறிவுக்கு ஒத்ததாகத் தோன்றுகின்றன. படித்தல் (Reading) என்ற ஒரு பிரிவு மிகையென்றும் அது கல்வி என்பதற்கே இன்றி யமையாது வேண்டப்படுவ தாகலின் அதன் பிரிவினுள் வரமுடியாத தொன்றென்றும் எடுத்துக்கூற வேண்டுவதில்லை. மேனாட்டார் மேற்கூறியவாறு முப்பிரிவுடைத்தாகப் பிரித்தது இயற்கை யறிவிற்கு ஒத்ததாக இல்லை யென்பது இதனாற் போதரும்.

சென்னை இலிங்கச் செட்டித் தெரு கார்ப்பொரேஷன் மாடல் ஸ்கூலின் "தசரா விழாக் கொண்டாட்ட"த்தில் திருவாளர் இராவ் சாஹிப் எஸ். வேணுகோபால் செட்டியார் அவர்கள் தலைமையின்கீழ் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவின் சுருக்கக் குறிப்பாகும்.

பிரிவின் சிறப்பு

இயற்கை யறிவிற் கேற்றவாறு இருபிரிவாய் நன்கு ஓர்ந்து தேர்ந்தே நம் முன்னோர் இவ்வண்ணம் பிரித்தனர் என்பது,

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு"

என்ற ஆசிரியர் திருவாக்கான் வலியுறுத்தப்படும். "எண்" என்று ஒரு பிரிவைக் கூறியபின் "ஏனை யெழுத் தென்ப" என்றதனால் எண் நீங்கிய மற்றைக் கூறுகளெல்லாம் எழுத்தென்ற ஓரே பெரும் பகுதியில் அடங்கும் என்று ஆசிரியர் கிளந்தோதி யதின் நுட்பம் போற்றற்குரியது. இனி எண் சாண் உடம்பிற் குத் தலையே தலைமைத்தாம் என்பதும் அதிலும் அதன்கண் ணமைந்த இரு கண்களே சாலச் சிறப்புடையன என்பதும் யாவரும் ஒப்ப முடிந்த உண்மைகளாம். அத்தகைய சிறப்பு வாய்ந்த கண்களோடு உவமைப் படுத்திக் கல்வியின் இரு பிரிவு களாகிய எண்ணையும் எழுத்தையும் ஆசிரியர் கூறியதிலுள்ள நுட்பங்கள் பலப் பல, விரிவஞ்சி ஈண்டு விரிக்காது விடப் பட்டன. எண்ணும் எழுத்துந்தான் கண்கள் என்றால், அதா வது கல்வி கற்றவர்கள் தான் கண்ணுடையவர்கள் என்றால், நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் தற்காலம் கல்வி யறிவில்லா திருக்கும் மக்களெல்லாம் கண்ணில்லாத குருடர்களா என்றும் "முண்டகத்தின் மேல் முழு நீலம் பூத்தது" போல் அவர்கள் முகங்களிற் றோன்றுங் கண்கள் எல்லாம் மற்றென்ன வென் றழைக்கப்படல் வேண்டுமோ என்றும் வினக்கள் எழுதல் கூடும். இயற்கையா யெழக்கூடிய இவ்வினக்களுக்கு விடை யளிப்பார் போன்று ஒப்புயர்வற்ற திப்பியமணியாம் நம்மாசிரியர்,

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

என்று உடன் கூறிப் போந்தார். கல்வியின் மாட்சிக்கும் தமி ழின் ஒப்பரிய உயர்நிலைக்கும் இவ்வியையபே பெரியதொரு சான்றாகும்.

இனி, சிற்றுயிர்க் குற்ற துணை கல்வியே யாதலின், அது

யாவர்க்கும் இன்றியமையாத தென்றும், கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு எய்துங்கால் கல்லாதாரின் ஒட்பத்தை அறிவுடையார் கொள்ளாது மறுப்பர் என்றும், கற்றவரே மக்கள் மற்றவர் மாக்கள் என்றும் கல்வியானுய பயனையும் கல்லாமையினு லெய்தும் இழிவையுங் குறித்தெழுந்த நூல்களும் உரைகளும் கணக்கிலவாதலின் அவற்றைப் பற்றிக் கூறல் வேண்டா.

தவறான கோள்கை

நிற்க, கட்டாய இலவச ஆரம்பக்கல்விச் சாலைகளைப் பற்றி ஒரு தவறுதலான கொள்கை மக்கள் மாட்டு இருந்து வருகிறதென ஊகிக்க இடமிருக்கிறது. அஃது என்னவெனில், அக்கல்விச்சாலைகளில் பையன்கள் சம்பளங் கொடுக்க வேண்டியதில்லை யாதலின் அங்குள்ள உபாத்தியாயர்கள் கருத்தோடு பையன்களுக்குப் பாடஞ் சொல்லாமல் ஒப்புக்குக் கூறித் தங் கடனைக் கழிக்கிறார்கள் என்பதே. இது மிகவுந் தவறான கருத்தாகும். பையன்கள் சம்பளங் கொடுக்காதது உண்மையே யாயினும் அங்குள்ள உபாத்தியாயர்கள் சம்பளம் பெறாமல் வேலை செய்கிறார்கள் என்பதில்லை. அவர்களுக்கு நகர சபையார் போதிய சம்பளம் அளிக்கின்றனர். அச்சம்பளம் பெறுதற் கேற்றவாறு உபாத்தியாயர்கள் தங் கடமையைச் செலுத்தி வரத் தவறமாட்டார்கள். எனவே இந்தத் தவறான கருத்தை யாவரும் நீக்குதல் வேண்டும்.

ஆசிரியர் கடமை

ஆசிரியர்களைப் பற்றிக் கூற நேர்ந்தமையால் அவர்கள் கடமையைப்பற்றி ஈண்டு இரண்டொன்று கூறி மேற் செல்லுதும். கல்வி கற்பிப்பது மிகவும் சீரியதோர் பணியென்றும், அது தானங்களிலெல்லாம் தலையாய தென்றும், எனவே அது கருத்திற் கிசைந்ததோர் திருப்பணி யென்றும் ஆசிரியர்கள் போற்றி வருதல் வேண்டும். கல்வி கற்பிக்குங்கால் மாணக்கனின் இயற்கை யாற்றலும் அறிவின் போக்கும், கற்கை யவாவின் திறனும் தெரிந்தே கற்பிக்க முயலவேண்டும். அழ அழச் சொல்ல

வேண்டிய ஒரு மாணவனுக்கு அவ்வாறே சொல்லியும், அடித்துச் சொல்லவேண்டிய ஒரு மாணவனுக்கு அவ்வாறே சொல்லியும், தட்டிக் கொடுத்துப் புகழுரை கூறிச் சொல்ல வேண்டிய ஒரு மாணவனுக்கு அஃதே போற் செய்துங் கல்வியைப் பரப்ப முயலும் ஆசிரியர்களே உண்மை ஆசிரியர்கள். ஆனால் இத்திறன் யாவர்க்கும் எளிதில் கைவரக்கூடிய தொன்றன்று என்பதை ஒப்புக்கொள்ளல் வேண்டும். எனினும் இவ்வழி முயலுவதை இலக்காக் கொள்ளுதல் நேரிதாம்.

மாணவர் கடன்

A Nation moves on the feet of its Children என்று ஆங்கிலத்திற் கூறுவதுண்டு. அதாவது ஒரு நாட்டின் எதிர்கால வாழ்வு அதன் சிறுவர்களின் திறமையைப் பொறுத்த தென்பதே அத்தொடரின் கருத்து. இக்கருத்து எல்லா நாட்டிற்கும் யாவர்க்கும் ஒப்ப முடிந்த தொன்றாகும். நம் நாடு நல்வழி யுற்று நற்பதம் எய்தி நானாவிதத்திலும் முன்னேறி நலம் பெற வேண்டுமானால், ஆண்டி முதல் அரசன் ஈறாகவுள்ள பல பிரிவுகளிலும் பிறக்கும் சிறுவர்களும் சிறுமிகளும் கற்கையவாவைப் பெருக்கிச் சீரிய முறையில் கல்வி கற்றல் அவர்தம் தலையாய கடனாகும். நூற்றுக்குத் தொண்ணூறு பேர் கல்லாதவர்கள் என்ற இகழ்ச்சிச் சொல் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் கற்றவர்கள் என்ற புகழ்ச்சிச் சொல்லாக மாறுதலை நம் நாடு பெறுங்காலமே அதன் பொற்காலமாகும்.

மதிப்புரை

திருநெல்வேலிச் சீமைச் சரித்திரம்

இதனை இயற்றியவர் திருநெல்வேலி எட்டயபுரம் சமஸ்தான ஜோசியர் திரு. S. குருகுஹதாஸ பிள்ளையவர்களாவர்.

இது திருநெல்வேலி ஜில்லாவைப்பற்றிய சரித்திரமாயிருந்த போதிலும் பொதுவாக இந்திய சரித்திரத்தின் ஒரு பகுதி

யாகக் கருதப்படும். சரித்திர ஆராய்ச்சி எட்டிய காலமுதல் திரு நெல்வேலி ஜில்லா யார் யார் ஆளுகையில் இருந்து எவ்வெவ்வாறு ஆங்கில அரசியலாரிடம் வந்திருக்கிறதென்ற விபரமும், திரு நெல்வேலி என்ற பெயர். வந்த காரணமும், பொதிகை மலையின் சிறப்பும், தாம்பிரவருணி நதியின் பெருமையும், தமிழ்ப்புலவர் அட்டவணையும், கிறித்தவ சமயம் எது முதல் எவ்வாறு தலை யெடுக்கலாயிற்றென்பதும், 1790-வது ஆண்டு முதல் கலெக்டரா யிருந்தவர்கள் பெயர் அட்டவணையும் இதன்கண் ஆண்டுக் குறிப்புடன் விளக்கமாகக் கூறப்பட் டிருக்கின்றன. நமது முன் னோர் வரலாறும் நம் நாட்டுப் பண்டைய வரலாறும் அறிய விருப்பங் கொள்ளாத மக்கள் மக்களாகார் என்பது சொல்லா மலே விளங்கும். இதனால் அரசியல் மாறுதல்களும் அரசியி லமைப்பும் எவ்வெவ்வாறு காலத்துக்குத் தக்கபடி ஏற்படும் என்பது அறியற் பாலதாகும்.

இந்நூலைப் பொதுவாக எல்லாத் தமிழ் மக்களும் சிறப் பாகத் திருநெல்வேலி ஜில்லா மக்களும் வாங்கிக் கற்றுப் போற்றுவாராக. 363 பக்கம். புத்தகம் வேண்டுவோர் ஆசிரிய ருக்கு எழுதுக.

உடற்பயிற்சி—முதற்பாடம்

இதனை இயற்றியவர் தமிழ்நாட்டு சாண்டோ திரு. லெ. சோமசுந்தரனார். 'உடம்பாரழியின் உயிராரழிவர்' என்ற திரு மந்திரத் திருவாக்கின்படி உயிரைச் செம்மையாயும் துலங்கிய அறிவுடனும் வைத்துக்கொள்வதற்கு உடலை முதற்கண் செம்மையாய் வைத்துக்கொள்ளல் வேண்டும். 50 ஆண்டு கட்கு முன் உடல் நலத்திற் கேற்ற பயிற்சிகள் நம்நாட்டில் எங் கணும் இருந்தன. பின்னர் உடற்பயிற்சி என்பது அறவே ஒழிந்து நம்மக்கள் இளமைக் காலத்திலேயே முதுமை யுற்றுக் காணப்பட்டு வருகின்றனர். வலிமை யிழந்து வாடுந் தமிழ் மக்களே! நீங்கள் நோயில்லாமல் நாட்டுக்கு உறுதிபயக்க வேண்டு மாயின் உடற்பயிற்சி நூல்களை வாங்கிப் பயின்று பயிற்சி செய்

யுங்கள். உடற்பயிற்சி விளக்கப்படம் 48 இந்நூலின்கண் மிளிர்கின்றன. படமும் விளக்கமும் அடுத்தடுத்து அமையக்கூடிய வகையில் வழுவழுப்பான கனத்த ஆர்ட் காகிதத்தில் அழகிய தாய் இந்நூல் அச்சிடப்பட்டுக் கலிக்காக் கட்டிடம் செய்யப் பட்டுள்ளது. இதன் விலை ரூ. 3

பெண்நலன் விலை அணா 6
உடற்பயிற்சி விலை அணா 6

இவ்விரண்டு நூல்களும் இயற்றியவர் பொன்னமராவதி, வலம்புரி திரு. ஆவி. சித. சொக்கலிங்க னவர்களாவர். செட்டிமார் நாட்டில் உடற்பயிற்சியைப் பற்றிய கிளர்ச்சிச் சில ஆண்டுகளாக மிக்குப் பரவி வருவது தெரிந்து மிகவும் மகிழ்கின்றோம்.

பெண்நலன் என்ற நூலில், 1. பெண் அடிமை, 2. பெண் கல்வி, 3. பிள்ளை வளர்ப்பு, 4. உடற்பயிற்சி, 5. நகை யணிதல், 6. இளமை மணம், 7. திருமணம், 8. விதவை மணம், 9. ஆண் பெண் சேர்க்கை, 10. பிள்ளைப்பேறு என்ற தலைப்புக்களைக் கொண்டு மாண்பு மிக்க அறிவு சான்ற பொருள்கள் திருத்தமாகவும் விளக்கமாகவுங் கூறப்பட்டிருக்கின்றன.

உடற்பயிற்சி விளக்கம் என்ற நூல், 1. உடற்பயிற்சி, 2. உடற்கட்டு, 3. பலம், 4. மலச்சிக்கல், 5. நோய்க் கிடங் கொடாமை, 6. புகையிலை, 7. தாதழிவு, 8. முடிப்புரை என்ற அரும்பெரும் பொருள்களை எடுத்து மொழிகின்றது. இவ் விரண்டும் தமிழ் மக்கட்கு உற்ற வகையில் உதவுந் தகையன வேண்டுவோர் இக்கழகத்திற்கு எழுதிப் பெறலாம்.

மருதமலை மான்மியம் (பிரபந்தத் திரட்டுடன்)

இதனை இயற்றியவர் கோவை வழக்கறிஞர் ராவ்சாஹிப் திரு. C. M. இராமச்சந்திர செட்டியாரவர்கள்.

இதன்கண் மருதமலை வரலாறும், மருதமலையைப் பற்றிப் பேரூர்ப் புராணத்திலுள்ள செய்யுட்களுக்குப் பொழிப்புரையும், கல்வெட் டாராய்ச்சியும் அடங்கியன. இஃதொரு சிறந்த ஆராய்ச்சி நூலாகும். இதன் விலை அணா 6. இது கோவைத் தமிழ்ச் சங்கத்திலும், நமது கழகத்திலும் கிடைக்கப்பெறும்.